[illegible]

V2 . NO. 32 . 15 Aug 1929

N29.2.32

189067

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு ஆகஸ்டு மீ 15வ [No. 32.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 621
2. அப்பர். (விஸ்தார கவி) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 623
3. சிந்தாமணி நீதிச்செய்யுள் V. பரமசிவன் 666
4. குலசேகரர் (பேயாழ்வார்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 627
5. தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) 630
6. வில்லிபாரதம் (காண்டவதகனச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B.A., B.L. 632
7. தெய்வச் செயல் (Sir Thomas Browne) K. இராஜகோபாலன் 634
8. கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 635
9. வர்த்தமானம் 639

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

கல்சரும் கவிதையும்.

III

பிறக்கின்ற எண்ணங்களை ஏற்று அவை தனித்தனி விவகரிக்குமாறு விடுவதும், அவ்வெண்ணங்களோடு அயலொன்றுங் கலவாமல், அவைதாம் ஒன்றோடொன்று தர்க்கமுறைப்படி தொடர்ந்து தோற்றுவிக்கும்முடிவை அடைவதும்,மனத்தினது ஒருகூறாய பகுத்தறிவாமென்பதும்; மற்றுப் பண்டேதான் பழகியுள்ளவற்றா லெய்தியிருக்கும் வண்ணத்தையும் அவ்வெண்ணங்களோடு பண்புறக்கலந்து அதனால் எய்தும் பயனிலே நிலைத்த நோக்கமுடையதாய் இயக்குகின்ற திறம் மனத்தினது மறுகூறாய மனோபாவமென்பதும்; அவ்வறிவும் இத்திறமும் ஒவ்வொருவர்மாட்டும் ஒவ்வோரளவு பிறப்பியற்கையாய் அமைந்துள்ளன வென்பதையுஞ் செப்பலாயினோம். இயற்கைக்கு இணங்கியியங்குங்கால், மனிதன் தன்னை உலகத்தினின்று பிரித்துக்கொண்டு விவகரிக்கவேண்டிய கருமங்களில் பகுத்தறிவும், தன்னைப் பிரபஞ்சத்துடன் சேர்த்துக் கொண்ட நிலைகளில் மனோபாவமும் வந்து உதவித் தத்தம் தொழில்களைப் புரிந்து அவனது வாழ்க்கையெனுந் துலாக்கோல் சாயாமல் நிமிராமல் சமமாக நிற்கவைக்கும். இயற்கையாய்ப் பெற்றனவாயினும் அவ்வாறுபெற்ற மற்றெல்லாவற்றையும்போல் பயிற்சியால் வளர்க்காவிடில் அவை இருந்தநிலையிலும் இல்லாதபடி அழிந்துபோகின்றன. உடலும் புத்தியும் ஒவ்வொருவருக்கும் இயற்கையாய் வாய்ந்தனவே. இவையிரண்டையும்தக்கமுறைகளில்பயிற்சிசெய்துபோற்றாவிடத்து அவை தத்தமக்குரிய தொழில்களை ஆற்றுதற்கியலாது அழிந்திட யாவருங் கண்டுளர். புத்தியின்பாற்பட்ட பயிற்சியொன்றுமியற்றாது உடலை மாத்திரம் உரமுறச் செய்வதாலும், மற்று உடல்நிலை உணங்காவகை பயிலவேண்டியவற்றை மறுத்துப் புத்திக்கே பயிற்சியூட்டிவருவதாலும் விளையக்கூடிய தீமைகளை இங்கு இயம்பவும் வேண்டுமோ! அஃதேபோல், மனத்திற்குரிய பகுத்தறிவு மனோபாவம் என்னுமிவ் விருபகுதிகளுக்கும் அவ்வவற்றிற் கியன்ற பயிற்சிகளைத் தளராது அளித்து வருவதில்லையாயின் இரண்டுமே இழிந்தேனும், ஒன்று இளைத்தேனும் போதல் திண்ணம். அவ்வாறு போகாமல் காக்கவேண்டியது யாவர்க்கும் கடன்.

சென்ற ஆண்டு முதலில் நாம், ''கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல்வகையும்'' என்னும் தலைப்பின் கீழ் எழுதிவந்த தலையங்கங்களிலொன்றில் (வால்யூம் 1. பக்கம் 61.), நூல்களைத் தெரிவுநூல், அறிவுநூல்,

கல்விநூல் கருவிநூல் என நான்குவகைகளாகப் பிரித்து அவைகளின் இலக்கணத்தையுங் கூறியுள்ளோம். கருவிநூல்கள், மற்றைய மூன்றும் பயில்வதற்கு ஆதாரமாயமைந்த பொதுத்தன்மை வாய்ந்ததால், அவையொழிய மற்ற மூன்றில் முன்னைய இரண்டும் பகுத்தறிவைப் பலப்படுத்தும் பயிற்சிக்குரியனவென்றும், மற்றது மனோபாவம் வளர்ந்து பெருகுதற்கேற்ற பயிற்சியாமென்றும் இங்குக் கொள்ளலாம். அக் கல்விநூல்களுக்கு ஆதாரமாயிருக்கின்ற சக்தியைக் கவிதை என்று இங்கு அழைக்கின்றோம்.

நடனங்கள் ஆடும்போதும் நல்லிசைபாடும்போதும் சித்திரங்கள்தீட்டும்போதும் சிலைகளைச் செதுக்கும்போதும் சொற்களைச்சேர்க்கும்போதும் மாந்தர்வரன்முறை ஒழுங்கொன்று அவைகளுக்கிடையே வழுவாமல் ஊடாடவைக்கின்றனர். இவ்வரன்முறை ஒழுங்கு ஓரேவிதத்ததாயினும் அவ்வவர் ஆட்டத்திலும் பாட்டத்திலும் படிவத்தைத்தீட்டுவதிலும் மொழிகளை இயக்குவதிலும் சிறிதுசிறிது பேதங்கள் இருப்பினும் இருக்கலாம். ஆயினும் பூரணமாய அவ்வரன்முறை ஒழுங்கென்பது இவ்வுலகாதிகளனைத்திற்கும், அவ்வுலகாதிகளைத் தழுவித்தோன்றும் தோற்றங்களனைத்திற்கும், யாவற்றிற்குமே அடிப்படையான ஒன்றேயன்றி வேறில்லை. இவ்வொன்றுய ஒழுங்கிற்கிணங்கி அதன் பிரதிகளாய்ப் பயில்கின்ற இசையை அசைவைப் படிவத்தைக் கேட்பவர்களும் காண்பவர்களும், பிறவற்றினின்று அடைகின்ற உவகை உணர்ச்சியைவிடச் செறிவும் தூய்மையும் மிக்க உவகையை அடைகின்றனர். அத்தனிப்பெரும் ஒழுங்கிற்கும் அதன் பிரதிகளாய இவைகளுக்கும் வேற்றுமை குறையக் குறைய, அக்குறைவினை உணர்கின்ற உணர்ச்சியால் உண்டாகும் உவகை மிகுவதாம். ஏகமாய், மாற்றுதற் கியலாததாய் எங்கும் வியாபித்திருக்கின்ற அவ்வொழுங்கிற்கும் அவ்வொழுங்கை உள்ளக்கிடக்கையாகப் பெற்று எழுகின்ற சங்கீதம் காவியம் சிற்பம் முதலிய பொருள்களுக்கும் ஒற்றுமை வேற்றுமையின் அளவினை ஒப்புநோக்கி உணரவல்ல உணர்ச்சியையே நாம் வழக்கத்தில் சுவை, என்னுமச் சொல்லால் குறிக்கலாகின்றோம். ஒருவன் தனக்குச் சங்கீதச் சுவையில்லை என்றுரைக்கும்போது, நிகிலப் பொருள்கள் யாவையும் ஊடுருவி இயக்குகின்ற அவ்வொருதனி ஒழுங்கின் தன்மையொடு இவ்விசையின் ஒழுங்கை ஒப்புநோக்கும் பயிற்சி பெற்றிலன் என்பதே கருத்து. காவியச்சுவை எய்தாதாரும் அத்தகையவரே. இவ்வொழுங்கை எத்துணைக்கு எத்துணை அதிகமாக உணர்கின்றோமோ அத்துணைக்கு அத்துணை அதிகமாக நமது உவகையும் வளர்வதாகின்றது. இதன்மேல் இனி இல்லை என்னும்படித்தாய ஒரு உவகைநிலைக்கும் அதற்குக் காரணமாய முழுமுதல் வரன்முறை ஒழுங்கிற்கும் அமைந்துள்ள அவ்வுறவின் தத்துவந்தான் அழகு என்னப்படுவது. கலையின் இளமையில் ஒவ்வொருவனும் இவ்வினையிலா மகிழ்ச்சிபிறப்பதற்குக் காரணமாயிருக்கின்றவதனிற்குச் சற்றேறக்குறைய ஒத்திருக்கும்படி ஒழுங்கினைத் தன் தொழில்களில் அமைப்பவனாகின்றனன். இவ்வகை அமைக்கின்ற சக்தி எவ்வெவர்மாட்டும் ஒரு சிறிது உளது. எனினும் உண்டோ இல்லையோ என்னும்படி அத்துணைச் சிறியதாயின் அஃதிருந்தும் ஒன்றே, இல்லாததும் ஒன்றேயென எண்ணல் வேண்டும். மற்று எவரிடத்தில் இச்சக்தி தலைசிறந்து இயங்குகின்றதோ அவர்களே கவிகளாவர். இந்தச் சக்தி, தனித்தனி எழுகின்ற எண்ணங்களை மனோபாவம், தன் வயமாக்கிய வெற்றியின் ஆட்சியேயன்றி வேறன்று. அத்தகைய சக்தியால் ஆட்சிசெலுத்துவோர், மக்களுலகமும் இயற்கையமைப்பும் தங்கள் உள்ளத்தில் தூண்டிய எண்ணங்களை, மனோபாவம் தன் வண்ணத்ததாகத் திரித்துத்தந்தபடி அவர் மறுபடி உரைக்கின்ற முறையினால் எய்துகின்ற உவகையானது மற்றவர்களையுஞ் சென்றடையலாகின்றது; அடைந்து அது 'பரஸ்பரம்' ஆகுங்கால் இருமடங்காகப் பெருகவும் பெருகும். அவர்கள் மொழிகளெல்லாம் உருவகத்தையே தம் உயிராகப்பெற்றிருக்கும். உயிர்களுக்கெல்லாம் செல்லுறுகதியொன்றமைந்து அவை மேன்மேல் வளர்வதேபோல் கவிதைக்கும் மேலுறு கதியுளது. ஒருவன் சந்திரனைப் பார்க்கின்றான். அவன் மனத்தில் உவகையொன்று உணரலாகின்றான். இவ்வுணர்ச்சி மறைந்தபின்னும் அதன்பயனை மனோபாவம் சேமித்து வைத்திருக்கின்றது. பின்னொருநாள் அவனே ஒருத்தியின் முகத்தை நோக்குகின்றான்; இது அழகுடையது என்னும் எண்ணம் உண்டாகின்றது. இந்தச் சமயத்தில் முன் சந்திரனைக்கண்டதன் பயனைச்சேமித்துவைத்திருக்கின்ற மனோபாவம் அவ்வெண்ணத்தைத் தன் வயப்படுத்திக்கொண்டு சந்திரனைக்கண்டபோது உண்டான உவகைக்குக் காரணமாயிருந்த அழகுதான் இவள் முகத்தினது தோற்றத்திற்குங் காரணமாயிற்றெனப் புதியதோர் நினைவை விளைவித்து, ஒப்புநோக்கி உரைக்குமாறு அவனைத் தூண்டுகின்றது—மதிபோன்ற முகம் என்னலாகின்றான். இவ்வாறு கவிதையின் இளமையில் உவமமே அவனது உணர்வைத் தெரிவிக்க முன்வந்து உதவும். எனினும் சந்திரன் வேறு, முகம் வேறு என்ற பிரிவு இவ்வுவமக் கருத்தில் உளது. இனி இவ்வுணர்வும் மறைந்தபின், இவள் முகத்தைக் கண்டதனாலாயபயனையும் முன் சந்திரனைக் கண்டதனாலாய பயனைச் சேமித்ததுபோன்றே மனம் சேமித்துவைத்துக்கொள்கின்றது இவ்விரண்டும் ஒருங்கே மனத்தில் பயிலப்பயில அவை வரவர நெருங்குவது இயற்கையே. நெருங்கிப் பின்னொருபோது இக்கருத்துத் தோன்றுங்கால் இடைநின்ற உவமஉருபு இற்றுப்போய் 'மதிமுகம்' என்னத் தன்னை விளம்பிக்கொள்ளலாகின்றது. கவிதையின் வளர்ச்சியில் இதனை இரண்டாவது படி என்னலாம். அதன்பின் இவ்வொற்றுமை இன்னும் வளரவளர, மதிமுகம் என்னுங்கால் முன்பின் சொல்வந்த வரிசையும் மிகையாகி மதியே முகம் என்ற உணர்ச்சியால் 'முகமதி' என்ன நேர்கின்றது. ஆதலின், வரன்முறை ஒழுங்கு உலகமனைத்தும் ஒன்றே என்னும் அவ்வாய்மையின் ஒரு பகுதியாய் இவ்வுருவகம் விளங்குகின்றது. இதனை மூன்றும்படி என்னலாம். பின்னுமிச் சரித்திரம் செல்லச் செல்ல உரம்பெற்றுயர்ந்த மனோபாவம் சந்திரன் எண்ணமும் முகத்தின் எண்ணமும் ஆகிய இவையிரண்டையும் முற்றிலுந்தான் ஒருணர்வால் முகந்துகொண்டுவிட்டதால் இரண்டு பொருள்களாய் அவை இருத்தல்இனிமிகையாகின்றது. ஆதலால் "அவள் மதி நோக்கினேன்" என ஆகு பெயராகிவிடக் காண்கின்

றோம். இதனால், கவிகள் பொருள்களுக்குள்ள நெருங்கிய உறவை உணர்வாராகி அவ்வுணர்ச்சியைப்பற்றி மேன்மேலுந்தொடர்கின்றார்களாதலால் அதனைத்தெரிவிக்க அவர் பயிலும் சொற்கள் காலஅளவில் அவரது எண்ணங்களின் பிரதிபதமா யிருப்பதுபோக அவைகளது ஒவ்வோர் பாகத்திற்கே அடையாளங்களாகின்றன. இவ்வடையாளங்கள்தாம் தற்குறிப்பேற்றமாகவும் உயர்வுநவிற்சியாகவும் இவையனைய பல்வேறு அலங்காரங்களென்றும் பெயர் பெறலாகின்றன. இவ்விதம் உருவகமொழிகளது உள்ளக்கிடக்கையாய் உலகப்பொருள்கள் யாவற்றிலும் இழைந்திருக்கின்ற ஒற்றுமையுறவை உணர்கின்ற இக் கவிதாசக்தி எவ்வகை அறிவிற்கும் பொதுவான உண்மையை வைத்துள களஞ்சியம் என்று கூறலாம். கவியா யிருப்பதென்னில் மெய்ம்மையையும் அழகையும் கிரகிக்கின்றதேயாகும். மெய்ம்மையையும் அழகையும் கிரகித்தல் என்பதன்பொருள் என்னையோ வெனின், இப்பிரபஞ்சத்திற்கும் அதனை நாம் பொறிகளால் உணர்வதற்கும் உள்ள உறவிலும், அவ்வுணர்விற்கும் அதனை உரைப்பதற்கும் உள்ள உறவிலும் அமைந்திருக்கின்ற நன்மையைக் கிரகிப்பதன்றி வேறன்று. நமது மொழியின் பிறப்பெல்லாம் ஆதியில் இக்கவிதாசக்தியின் காரியமேயாகும். அகராதியின் அகலமும் இலக்கணங்களின் நுண்மையும் பிற்றைநாள் செய்திகள். கவிதையால் சிருஷ்டிக்கப்பட்டவைகளின் நினைவுக் குறிப்புக்களே அவை.

அழிவற்றதாய் எங்கெங்கும் நிலைபெற்றுள இவ்வரன்முறை ஒழுங்கைக் கிரகித்து விளம்புகின்ற கவிகள் இயல் இசை நாடகங்கள் ஆக்குமவர்மாத்திரமேயாவர் என்று எண்ணவேண்டா. தர்மசாஸ்திரங்களும் நீதிசாஸ்திரங்களும் நிறுவினோரும், வாழ்க்கைக் கலைநலம் கற்பிப்போரும், சமயநறி வகுக்குமாற்றால் நம் சிந்தனைக்குச் சிறிதே எட்டவல்ல மேலுலகநோக்கத்தினை மெய்ம்மைக்கும் அழகிற்கும் அண்மிய தாக்குமாறு புரிகின்ற ஆசாரியர்களும், கவிதாசக்தி சிறக்கப் பெற்றிருக்கின்றவர்களாவார். இவர்களும் உலகமனைத்தினும் ஊடுருவிநிற்கும் அவ்வொழுங்கின் ஒருமையைக் கிரகித்தவர்கள். கிரகித்து அவ்வொழுங்கினிற்கு இணங்கி நமது வாழ்க்கை பிரதிபிம்பிக்க வேண்டுமாயின் நமது செயல்களும் சிந்தனையும் எவ்வகைப் பயில்வதாகும் என்பதை வகுத்துக் காட்டுகின்றனர். இலக்கியக் கவிகளாயினும் மற்றெவ்வகைக்கவிகளாயினும், அவரெலாம் ஏகமாய் எல்லையற்றதாய் என்றுமுளதாய ஒன்றில் தாமும் கலந்து கொள்ளுந் தன்மையர். அவர் வரையில் காலம் இடம் எண் என்ற வரையறை அவர்களுக்கிலது. ஆதிவேதமேனும் என், மனுதர்ம சாஸ்திரமாயின் என், கிறிஸ்தியர் பைபில் ஆயின் என், மகம்மதியர் கொரான் ஆயின் வள்ளுவர் குறளாயின் ஷேக்ஸ்பியர் நாடகமாயின் என், பிளேட்டோ குடிவாழ்க்கைக் கொள்கைளை விளக்கிய 'ரிபப்ளிக்' ஆயின் என், கம்பரது இதிகாசமாயின் என், காளிதாசன் ரகுவம்சம்ஆயின் என், இன்னபடியே பிரபஞ்சத்தை உணர்ந்து உரைக்கின்ற உறவினில் உள்ள நன்மையை மெய்ம்மையென்றும் அழகென்றும் வெவ்வேறு பேரினால் விளம்புவனவேனும் வரன்முறையொழுங்கைக் கிரகிக்கின்ற அக்கவிதாசக்தியால் அவை யாவும் நிகழ்கின்றனவாதலால் அத்தனையும் காவியங்களே.

அப்பர்

5. அப்பர் கவித்திறம்.

1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

[611 வது பக்கத் தொடர்ச்சி]

வித்தாரகவி

கடல்:—

கடலகை மேழிரேடும் புவனமுங் கலந்தவிண்ணும்
உடலகத் துயிரும்பாரு மொள்ளழ லாகிநின்று
தடமலர்க் கந்தமாலை தண்மதி பகலுமாகி
மடலவிழ் கொன்றைசூடி மன்னுமாப் பாடியாரே.

—திருஆப்பாடி-திருநேரிசை 1.

நிலை:—

பொருந்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதவேண் [டா
இருத்தியெப் போதுநெஞ்சி னிறைவனை யேத்துமின்க
ளொருத்தியைப் பாகம்வைத்தங் கொருத்தியைச் சடையுள் [வைத்த
துருத்தியஞ்சு டரினனைத் தொண்டனேன் கண்டவாறே.

—திருத்துருத்தி-நேரிசை-1.

மா:—

மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலுங்
காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரங் கொடுப்பர்போலு மாவடு துறையினரே.

—திருவாவடுதுறை-திருநேரிசை-1.

உலகம்:—

பார்கொண்டுமூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாத [மெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர் களிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்தாடும் கழுமலவ
காளன்றி மற்றுமுண்டோ வந்தணுழி யகலிடமே [ர்க்

—திருக்கழுமலம்-திருவிருத்தம்-1.

சொல்:—

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதி போலுங்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலுங்
கடனஞ்ச முண்டிருந்த கண்டர் போலும்
மண்மலிந்த மணிவளர்த்திண் டோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலுங்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

—திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்-திருத்தாண்டகம்-I

OFFICE OF THE R... MADRA...
K.C.R.700

* நீர்:—

ஓத மால்கடல் பரவி யுலகெலா
மாத ரார்வலங் கொண்மறைக் காடரைக்
காதல் செய்து கருதப் படுமவர்
பாத மேத்தப் பறையுநம் பாவமே
—திருமறைக்காடு - திருக்குறுந்தொகை 1.

செல்வப் புனற்கெடில வீரட் டமுஞ்
சிற்றேமமும் பெருந்தண் குற்றா லமுந்
தில்லைச்சிற் றம்பலமுந் தென்கூ டலுந்
தென்னானைக் காவுஞ் சிராப் பள்ளியு
நல்லூருந் தேவன் குடி மருகலு
நல்லவர்கள் தாமேத்து நரை யூருங்
கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக்
கட்டங்கத் தோடுறைவார் காப்புக் களே.
—திருவீரட்டானம் - காப்புத்திருத்தாண்டகம் - 1.

தேர்:—

தேரையு மேல்கடாவித் திண்ணமாத் தெளிந்துநோக்கி
யாரையு மேலுணரா வாண்மையான் மிக்கான்றன்னைப்
பாரையும் விண்ணுமஞ்சப் பரந்ததோள் முடியடர்த்துக்
காரிகை யஞ்சலென்பார் கலிமறைக் காடனாரே.
—திருமறைக்காடு - திருநேரிசை - 1.

அமுது:—

ஆராத வின்னமுதை யம்மான் றன்னை
யயனொடுமா லறியாத வாதி தன்னைத் ”
தாராரு மலர்க்கொன்றைச் சடையான் றன்னைச்
சங்கரனைத் தன்னொப்பா ரில்லா தானை
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நீள்விசும்பா யாழ்கடல்க ளேழுஞ் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின்முக் கூட லானைப்
பயிலாதே பாழேநா னுழன்ற வாறே.
—திருப்பள்ளியின் முக்கூடல்-திருத்தாண்டகம்-1.

புகழ்:—

புகழும் பெருமையாய் நீயே யென்றும்
பூங்கயிலை மேவினாய் நீயே யென்றும்
இகழும் தலையேந்தி நீயே யென்றும்
இராமேச் சுரத்தின்பன் நீயே யென்றும்
அகழும் மதிலுடையாய் நீயே யென்றும்
ஆலவாய் மேவினாய் நீயே யென்றும்
திகழுமதி சூடி நீயே யென்றும்
நின்றநெய்த் தானாவென் னெஞ்சு ளாயே.
—திருநெய்த்தானம்-திருத்தாண்டகம்-7.

நிலம்:—

பாரார் பரவும் பழனத் தானைப்
பருப்பதத் தானைப் பைஞ்ஞீலி யானைச்
சீரார் செழும்பவளக் குன்றொப் பானைத்
திகழும் திருமுடிமேல் திங்கள் சூடிப்
பேரா யிரமுடைய பெம்மான் றன்னைப்
பிறர்தன்னைக் காட்சிக் கரியான் றன்னைக்
காரார் கடல்புடைசூ ழந்த ணாகைக்
காரோணத் தென்றுான் றங் காண லாமே.
—திருநாகைக்காரோணம்-திருத்தாண்டகம்1.

ஆரணம்:—

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்த மணாளனார்
நார ணன்னண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே
—திருநள்ளாறு-திருக்குறுந்தொகை-2.

கடவுள்:—

கடவு ளைக்கட லுள்ளெழு நஞ்சுண்ட
உடலு ளானையொப் பாரியி லாதவெம்
அடலு ளானை யரத்துறை மேவிய
சுடரு ளானைக்கண் டீர்நாந் தொழுவதே
—திருநெல்வாயிலரத்துறை-திருக்குறுந்தொகை-1.

திகிரி:—

பருவரை யொன்றுசுற்றி யரவங்கைவிட்ட
விமையோரிரிந்து பயமாய்த்
திருநெடு மால்நிறத்தை யடுவான்விசும்பு
சுடுவானெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கோர் பிதிகாரமொன்றை
யருளாய்பிரானே யெனலும்
அருள்கொடு மாவிடத்தை யெரியாமலுண்ட
வவரண்டரண்ட ரரசே.
—தசபுராணம்-பண்-பழம்பஞ்சாம்-1.

விஸ்தாரகவிக்கு இன்றியமையாப் பொருத்தம் இரண்டாவதாய்க் கூறும் சொல்நயம் திருநாவுக்கரசர் தேவாரத்தில் எடுத்துக் காட்டவேண்டிய அவசியமே யில்லை. எப்பாசுரத்தை எடுப்பினும் தேனொழுகும். ஆதலான் அதன் வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு சொல்லும்

விழுப் பொருள் தோன்றல், வேறுபல் பொருளி
னொழுக்கல், வகையுளி யுறுதல், ஈறு
திரித லின்றிச் செய்வ'' தாய் நிகழும்,
இலக்கணவிளக்கம் 772.

விஸ்தாரகவிக்கு மூன்றுவது பொருத்தம் பால்பொருத்தமாகும். அதாவது ஆண்பாலைக் கூறுமிடத்து ஆண்பாலெழுத்துக்களும் பெண்பாலைக் கூறுமிடத்துப் பெண்பாலெழுத்துக்களும், உரியவாம். மயங்கிவருவதும் உண்டாயினும், இத்தகையவரையறுப்புத் திருநாவுக்கரசின் பாசுரங்களில் நன்கு காணலாம். ஆண்பாலெழுத்துக்கள் குற்றெழுத்துக்களாகும், பெண்பாலெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாம், ஒற்றும் ஆய்தமும் பேடாம்-தேவாரப்பாசுரமொன்றை ஆராய்வோம்:—

ஈன்றாளு மாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க் கன்பன் றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன் றன்னடியோங்
[களுக்கே
—திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்-1.

ஈன்றாளுமாய்—பெண்பால் —4-நெடில்
யெனக்கெந்தையும்—ஆண்பால்—5-குறில்
இமையவர்க்கன்பன் ஷை —6-குறில்
இருந்தனன் ஷை —4-குறில்

விஸ்தாரகவிக்கு நான்காம் பொருத்தம், வருணப்பொருத்தமாம். பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க், ங், ச், ஞ், ட், ண், என்னும் ஆறு ஒற்றெழுத்துக்களும் அந்தண வருணமென்றும், த், ந், ப், ம், ய், ர், என்னும் ஆறு ஒற்றும் அரசர்வருண மென்றும்,

* வெள்ளநீர்ச் சடையார்போலும் விரும்புவார்க் கெளியார்
[போலும்
உள்ளுளே யுருகிநின்றங் குகப்பவர்க் கன்பர்போலுங்
கள்ளமே வினைகளெல்லாங் கரிசறுத் திடுவர்போலும்
மள்ளலார் பழனமேய வாலங்காட் டடிகளாரே.
—திருவாலங்காடு - திருநேரிசை - 1.

வ், ல், ற், ன், என்னும் நான்கு ஒற்றும் வணிகவருண மென்றும், ழ், ள், என்பன சூத்திர வருணமென்றும் புலவர்கூறுவர். அப்பர் வருணப்பொருத்தத்தைஅலட்சியம் செய்ததாகவே காணப்படுகின்றது. ஏனெனில்

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்ர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே *
திருமாற்பேறு - திருக்குறுந்தொகை - 3.

சாத்திரம்பேசும் உயர் குலத்தோரைச் சழக்கர்கள் என்றார் வாகீசர். ழகரம் சூத்திரவெழுத்தாயினும் உயர்குலத்தோரைக் குறிக்கப் பயன்பட்டது.

தமிழெழுத்துக்களில் † அமுத எழுத்துக்களெனக் கொள்ளப்படுவன, அகர, இகர, உகர, எகரங்களும் க ச த ப ந ம வ வென்னும் ஏழும் (இதனாலுண்டாம் உயிர்மெய் எழுத்துக்களும்) என்பர் புலவர். இவற்றையே அப்பர் தேவாரப்பாக்களிற் பெரும்பாலுங் காண்கின்றோம். நஞ்செழுத்துக்களென் றிகழப்பட்டன $ வரின் அவை அவற்றிற்குத் தக்க இடங்களி லமையக் காண்கின்றோமேயொழிய, மங்கலத்திற்குப் பழுதுண்டாக்குமாறு வருவதில்லை. இந்நஞ்செழுத்துக்களில் ஆய்தமும், மகரக்குறுக்கமும், அளபெடையும், அப்பர் தேவாரத்தில், ஒன்றேனுமில்லை. ய், ர், ல், ள் என்னும் மெய்யெழுத்துக்களை யூர்ந்த ஆவும், ஓவும் இம்மெய்யெழுத்துக்களுமே சிறுபான்மை அப்பர் தேவாரத்திற் காணப்படுகின்றன. அவை வரும் சந்தர்ப்பங்களிலும் அந்நஞ்செழுத்துக்களே தக்கனபோல் காணப்படுகின்றன. சில உதாரணவாயிலாய்க் காண்போம்:—

மூக்கு வாய் செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே
—திருவேகம்பம்-திருக்குறுந்தொகை-7.

உள்ளா றுதஹோர் புண்டக ரிகத்திரள்
தெள்ளா றுச்சிவச் சோதித் திரளினைக்
கள்ளா றுதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றுவென நம்வினை நாசமே.
—திருநள்ளாறு-திருக்குறுந்தொகை-1.

மேற்கண்ட பாசுரங்களின் பொருளைநோக்குழி அவற்றுள் காணும் நஞ்செழுத்துக்களை நீக்குவது அச்சந்தர்ப்பத்தில் விசேஷமன்றெனவே, நாம் கருதல் வேண்டும். மிகவும் கடூரமாய் அப்பர் பாடும்போதே இந்நஞ்செழுத்துக் கள்மிகுவதைக் “கூற்றாயினவாறு” என்னும் முதற்பதிகத்தின் 9, 10-ம் செய்யுட்களில் உற்று நோக்கில் நாம் காணலாகும்:—

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மல்துரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியார்
அடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையு மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே!

போர்த்தா யங்கோ ரானையி னீருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்!
ஆர்த்தா ரரக்கன் றனைமால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் த வது கருதாய்!
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்!
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே!

இவ்வாறே திருமறைக்காட்டில் கதவு திறப்பிக்க இவர் ஓலமிடுவதுபோல் பாடும் பாசுரங்களில் நஞ்செழுத்துக்கள் மலிவதும் விந்தையா யிருக்கின்றது:-

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலிவி லாக்கத வந்துணை நீக்குமே

இத்தகைய நஞ்செழுத்துக்கள் அப்பர் பண்களில் கலக்குமாயின் அவை எதிரியின்பேரில் அஸ்திரப் பிரயோகம்போல் நடக்குமென்பர் மேலோர். காந்தாரப் பண்ணில் இவைகலந்த “சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'' என்னும் திருப்பதிகத்தில் “திண்ணன் கெடிலப்புனலு முடையா ரொருவர் நாமஞ்சுவதியா தொன்றுமில்லை'' என்றது பல்லவன் ஏவிய யானையைப் பயப்படுத்தியதும் சங்கீத உண்மைகளுக்கு முரணாகாது.

* பாவநாசத் திருக்குறுந்தொகை 3, 4, பாசுரங்களை நோக்குக.

† கசதப நமவ வேழொடு மகா
மிகர மூகர மெகர நான்கு
மமுத வெழுத்தென் றறைந்தனர் புலவர்.
—இலக்கண விளக்கம் - 779.

$ ய, ர, ல, ள, வென்னு மெழுத்தினை யூர்ந்த
ஆவும், ஓவும், அந்நாற் புள்ளியும்
ஆய்தமும் மஃகான் குறுக்கமு மளபும்
எய்தா நஞ்சென் றிகழ்ந்தனர் புலவர்.
—இலக்கண விளக்கம்-780.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.
வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

R.C.R.70/14

சிந்தாமணி நீதிச் செய்யுள்

(606 பக்கத் தொடர்ச்சி)

சிந்தாமணி யென்ற இந்நூல் பொருட் டொடர்நிலைச் செய்யுளாகும். அப்பொருட்டொடர்நிலைதானும்

"பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா மியலும்.........."

என்பதைக்கற்றோரனைவரும்நன்குணர்ந்திருப்பர். சிந்தாமணி என்ற இக்காப்பியம் காப்பிய இலக்கணத்தைப் பெரும்பாலுந் தழுவிநிற்றலை, நுணித்துநோக்கிற் புலனாம். யான் இச்சிந்தாமணிக்க ணுளவாய நீதிச்செய்யுட்களை தேடிக்கொண்டு வருங்கால் குணமாலையாரிலம்பகத்து இறுதிச்செய்யுளாக,

அருள்வலி யாண்மை கல்வி யழகறி விளமை யூக்கந்
திருமலி யீகை போகந் திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவரிவ் வுலகில் யாரே சீவக னொக்கு நீரார்
பெரிதரி திவனைத் தொன்றாய் பெறுகெனச் சிறப்புச்
[செய்தாள்.

என்றது இருத்தலைக் கண்டதும் 'தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்' என்ற காப்பிய விலக்கணம் நினைவுக்குவந்தது. இன்னவாறு காப்பிய விலக்கணம் பொருந்தியபகுதிகளைஎடுத்துக்காட்டவேண்டுமென்ற அவா பெரிதும் உண்டாயிற்று. சமயம் வாய்த்துழிக் குறிப்பமெனத் தேறி அமைந்தனன்.

மிக்கார்தங் கேட்டின்கண் மேன்மையிலாச்
சிறியோர்போ
னக்காங்கே யெயிறுடைந்த நறவமுல்லை
நாள்வேங்கை
தக்கார்போற் கைம்மறித்த காந்தளந்தோ
தகாதெனவே
தொக்கார்போற் பண்மாவு மயிலுந்தோன்றித்
துளங்கினவே

[மிக்கார் - அறிவினாலுயர்ந்தவர், நக்காங்கே - சிரித்தவாறுபோல, தக்கார் - மேன்மக்கள், கைம்மறித்து - கை விரித்து விலக்கி, தொக்கார் - சுற்றத்தார், துளங்கின - நடுங்கின]

"நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்"

என்ற கருத்தினையும் ஈண்டுக் கருதுதல்வேண்டும். "தக்கார்போற் கைம்மறித்து" என்றதையும் "மேன்மையிலாச் சிறியார்போ னக்காங்கே" என்ற கருத்தையும் நாம் பயில்தொறும் பயில்தொறும் ஒருவகை பாவம் மனத்தின்க ணுண்டாதல் காண்க. தேவர் அவ்வவற்றின் தன்மைநோக்கி அவ்வவற்றிற்கு உவமை யமைத்தலில் வல்லவர். அவைகளை நாம் சமயம் வாய்க்கும்பொழுது காட்டுதும். இச்செய்யுட்கண் "காந்தளந்தோ தகாதெனவே" என்ற கருத்தைக் கருதுக. காந்தளின் மென்மை நோக்கி அதற்கேற்ற தொழிலமைத்தார் தேவர். சீவகன் புணர்ச்சிவேண்டி விமலையைத் தீண்ட அவள் கண்விழித்த தோற்றத்தை மிகப் பொருந்தும்வகையாற் கூறுகின்றார் ஆசிரியர்.

"துயிற்கண்கள் விழித்த தோற்றம்
வாசவான் குவளை மெல்ல
வாய்விடா நின்ற தொக்கும்"

[உறங்கிய கண்கள் விழித்த தோற்றமானது குவளைமலர் மெல்ல அலருந் தன்மையை ஒத்திருந்தது]. இன்னபல.

அலங்கறு தவிழ வஞ்செஞ்
சீறடி யணிந்த வம்பூஞ்
சிலம்பின்மேற் சென்னி சேர்த்திச்
சிறியவர் செய்த தீமை
புலம்பலர் பொறுப்ப ரன்றே
பெரியவ ரென்று கூறி
யிலங்குவேற் கண்ணி யூட
லிளையவ னீக்கி னானே.

[இளையவன், காற்சிலம்பின்மேல் மாலையிலுற்ற தாது அவிழ்ந்து வீழும்படியாகத் தன் சென்னியைப் பொருத்திச் சிறியவர்கள் செய்த குற்றங்களை வெறுமல் பொறுத்துக் கொள்ளக் கூடியவர்களல்லரோ பெரியவர் என்று கூறி வேல்போன்ற கண்ணினை யுடையாளது ஊடலை ஒழித்தான்]

ஈங்குச் "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்ற நீதியுரையும் நினைக்கற்பாலது. "சிறியவர் செய்த தீமை புலம்பலர், பொறுப்பான்றே பெரியவர்!" எனக் கூறுங்கால் சிலருக்கு இக்கருத்தா னோரைய மெழுதலுங் கூடுமன்றே! "பெரியோரே குற்றஞ்செயின் அதற்கென் செய்வது"? என்றதே அவ்வையம். குற்றம் நிகழற்குற்ற காரணத்தை நாம் கருதின் அவ்வையம் அறவே நீங்கு மென்பதைத் தெளிக.

"இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்"

என்ற குறளின் கருத்தும்

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்ற குறளின் பொருளோசையையும் உட்கொண்ட சிந்தாமணிச் செய்யுளொன்று காண்க.

"இல்லாளையஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சிற்
புல்லாளனாக"

[மனைவியை அஞ்சி விருந்தினர்களது இனிய முகத்தைக் கொன்ற புல்லாளனாகக் கடவேன்]

இல்லாளை யஞ்சுதல் நல்லறஞ்செய்தலைத் தடுக்குங் கல்லாக நிற்குமென்பது வள்ளுவர்கருத்து. பின்னும் "இல்லாள்கட் டாழ்ந்த" இயல்பு வேண்டுமென்பர் ஈண்டுக் குறித்துள்ள கருத்தானது சிறிது சிந்தித்தற்குரியதாகும். ஆண்மகனிடத்துமத் தாழ்ந்த இயல்பு இல்லாகுமாயின் இல்லறமெனும் நல்லறம் நடத்தலைலாது என்பது கருதுதற்பாலதாம். இருவரில் யார்மாட்டாயினும் அஞ்சு மியல்பு இருக்குமாயின் அவ்விருவருக்குங் கருத்தொருமித்தல் எவ்வாறு? "மங்கலமென்ப மனைமாட்சி" என வகுத்த வள்ளுவர் ஆணினும் இல்லாள் தாழ்ந்தவளென்ற கருத்துப்படக் கூறுதல் என்னையோ? ஒரு வீட்டின்கண் ஒருவர்க்கொருவர் மனமொவ்வாதிருப்பின் அஃது சான்றதோ?

"அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்"

என்ற குறள் "பெண்வழிச் சேறல்" எனுமதிகாரத்தில் உளதாகும். இல்வாழ்க்கையை அதற்குற்ற இயனெறி வழாது நடாத்துதலினும் சிறந்த அறம் வேறிலதென்பர் வள்ளுவர். இல்வாழ்க்கை நெறிக்கணின்றே எல்லாப் பொருளையும் பெறற் கேது விருக்கின்றது என்ற கருத்தும் வள்ளுவரதே. நெறிமுறையாற் கருதினும் இவ்விருவரும்பெறும் இல்லறத்தின் பயன்மக்கள் என்பது போதரும் இல்லறத்தின்கண் இவ்விருவருக்கும் சம உரிமையே உண்டென்பது யாவரானும் ஒப்புக்கொளற்பாலதே. இல்லறச் சகடம் இனிதாய் நடத்தற்கு இவ்விருவருமே உரியோர்கள். இல்லையேல் செவ்வனம் நடைபெறாது. இன்னணமிருப்ப மனைவி கணவனுக்கு அடிமை போல்வாள் என்ற வள்ளுவர் கருத்துப் பெரிதும் கருதற்பாலதாமென்பது எமது முடிந்த கருத்தாம்.

"இல்லாளையஞ்சி" என்ற சிந்தாமணிக் கருத்து நமது கருத்திற்குச் சிறிது அரண் செய்வதாகும். இல்லாளை இல்லான் அஞ்சவேண்டாம். இல்லானை இல்லாளு மஞ்சவேண்டாம். தத்தம் கருத்தினை வெளிப்படுத்திப் பின் செயலாற்றின் ஒருவரையொருவர் அஞ்சவேண்டி யிராது.

"விருந்தின் முகங்கொன்ற" என்ற கருத்துப் பன்முறை பயின்று தெளிதற்பாலதாம். "முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்ற குறட்கருத்தின் ஓசை சிந்தாமணிச் செவியில் இடையறாது கேட்கின்றது.

செல்வர்க்கே சிறப்புச் செய்யுந்
திருந்துநீர் மாந்தர் போல
வல்குற்கு மூலைக்கு மீந்தா
ரணிகல மாய வெல்லா
நல்கூர்ந்தார்க் கில்லை சுற்ற
மென்றுநுண் ணுசுப்பு நைய
வொல்கிப்போய் மாடஞ் சேர்ந்தா
ரொருதடங் குடங்கைக் கண்ணார்.

இச்செய்யுட்கண் இரண்டு நீதிகளை நாம் காண்கின்றோம். "செல்வர்க்கே சிறப்புச்செய்யுந் திருந்துநீர் மாந்தர்" என்ற அநுபவக் கூற்றினை நேரிற் காண்டுமன்றே! செல்வர் செல்வரையே விரும்புந் தன்மை சான்றோர்பாற் காண்பதொன் றன்று. அவர்தங் கட்புலன் யாவரையுஞ் சமமாகவே காணும். உயிரின்நிலை அறிந்த அப்பெருந்தகையாளர் அன்னணம் வேற்றுமை பாராட்டுதல் கூடுமோ? மக்களுக்குள் எக்காலத்தும் மாறுபாடு உளதென்ற கொள்கை ஈண்டு வலியுறல் காண்க. ஆயினும் மக்களுக்குள் சில பொதுக் குணங்கள் அமைபப் பெற்றிருத்தல் வேண்டும், அவை இயற்கையாக அமையற்பாலனவே. தத்தம் இனநலத்தால் சிறப்புறும் அல்லது இழிவுறும். இப்பொதுக்குண மமையவில்லையேல் மக்கள்பால் கூட்டுறவும் ஒருமனப்பண்பும் உண்டாதல் அரிது. இழிந்தாரிடத்தும் நன்மை காண்டல் சான்றோர்தம் பெற்றியாகலின் அன்னார் யாவரையும் உவர்த்து நீக்கார். தனக்கொப்பானரை மட்டுமே விரும்புதல் சான்றோரது செயலன்று. அஃது இழிந்தோரது செயலாம். எனவே செல்வர் செல்வரையே விரும்பும் பான்மை எத்திறத்ததென்பது எளிதி னுணரலாகும். தேவர் அச்செய்யுளிடத்து "திருந்துநீர்" மாந்தர் எனக்கூறினமையும் நவனிக்கற் பாலதாம்.

காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ—ரேலா
ரிடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

[செல்வம் மிகுங்காலத்தில் கிளைபோன்று (அச்செல்வரை) பொருந்துபவர் நட்சத்திரங்களினும் பலராயிருப்பர். துன்பத்தை ஒருவன் அடைந்தால் உறவினரென்று சொல்லக் கூடியவர்கள் சிலரே]

குறிப்பு.—"காலாடு போழ்தில்" எதிர்மறை இலக்கணச் சொல்லாகும். எதிர்மறை யிலக்கணையாவது - ஒருசொல் தனக்கு எதிர்மறையான அர்த்தத்தை வளர்த்துவது. "சிரப்பு" என்ற சொல் வறுமையை உணர்த்தல் போல.

"நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றம்" என்ற நீதியினைக் "கேளுங் கிளையுங் கெட்டார்க் கில்லை" என்ற உரை கொண்டும்

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்

[அறத்தொடு பொருந்துதலிலாத நல்குரவுடையான் பெற்றதாயானும் வேறொருவன்போலக் கருதப்படும். நல்குரவு - ஆகுபெயர். உம்மை - சிறப்பு.]

என்ற வள்ளுவர் வாய்மையானுந் தெளிக.

குலசேகரர்.

[607 வது பக்கத் தொடர்ச்சி]

பேயாழ்வார்

3 மார ணூர்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்
பாரி னூரொடுங் கூடுவ தில்லையான்
ஆர மார்ப னரங்க னநந்தன்நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே

[மாரன் - மன்மதன்; வரி - வரிந்து கட்டிய, அல்லது அழகிய; வெஞ்சிலை - தப்பாது எய்யும் கொடிய வில், அல்லது விரும்பும் வில்; ஆரம் - முத்துமாலை; அநந்தன் - முடிவிலாதவன்; நரகாந்தகன் - நரகாசுரனுக்கு யமனாய்க் கொன்றவன்]

ஆரமார்பன்

அழகே தன்னியல்பானவன்; அதற்கு மேலும் அழகுக் கழகுசெய்வதென முத்துக்கோவை யணிந்த மார்பனைப் இயற்கையேகொண்டு ஒப்பனைசெய்து விளங்குபவன்.

அரங்கன்

எம்மைநோக்கி இன்னருள் செய்ய இவ்வுலகிற் குடிபுகுந்த திருவரங்கத்தே அவனழகும், இயற்கையின் ஒப்பனையும் ஒருங்கே ஒளிர்வது காண்க

அநந்தன்

இவ்வாறு எமக்கு எளியவனாயினும் எல்லோர்க்கும் அரியவனே. காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் முடிவிலாது எங்குமாய் எல்லாமாய் விரிந்தான். இவ்வின்ப வெள்ளத்தில் எங்குப் புகினும் அவனோடு கூடியாடலாம். எல்லாமாய் விரிந்த அருமையும் இவ்வாறு எமக்கு எளிமையாகின்றது. தொட்ட தொட்ட

இடந்தோறும் தொல்லையின்பமாய்த் தொடர்ந்து நிற்பான் (நன்மை பெரிதாகும்).

நல்

இவ்வாறு எங்கும் பரந்து நின்று நல்லனமாய பெரியவன் [நன்மை - மங்கலம்-இன்பம்] நமக்கு இன்பந்தரும் நல்லோனே.

நாரணன்

"நாராயணன் என்றது நாரங்களுக்கு அயனம் என்றபடி. நாரங்களாவன - நித்யவஸ்துக்களினுடைய திரள். அவையாவன ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநசக்தியாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும் காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணாதிபரும், முக்தரும் பரமாகாசமும், ப்ரக்ருதியும் பத்தாத்மாக்களும் காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும் அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும். அயனம் என்றது இவற்றுக்கு ஆச்ரயம் என்றபடி. அங்ஙனன்றிக்கே இவை தன்னை யாச்ரயமாக வுடையன் என்னவுமாம் இவை யிரண்டாலும் பலித்தது பரத்வஸௌலப்யங்கள். அந்தர்யாமித்வமும் உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம். எம்பிரானைந்தை என்கையாலே ஈச்வரனே எல்லாவுறவும் முறையுமென்று சொல்லும் நாம் பிறர்க்கான வன்றும் அவன் நமக்காய் இருக்கும், இராமட மூட்டுவாரைப்போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டுபோகும்" பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படி 1-ப்ரகரணம் 95-104). "நாராயணசப்தம் நாரங்களுக்கு அயநம் என்றும், நாரங்களை அயனமாகவுடையன் என்றும் ஸர்வாதாரத்வாதி விசிஷ்டனை ஸ்ரீய:பதியைச் சொல்லுகிறது... நாராயணசப்தம் நிகரில்புகழாய் இத்யாதிகளிற் சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யாதிகளையுடையனான ஸர்வேச்வரனைச் சொல்லுகிறது" (வேதாந்ததேசிகர் ரஹஸ்ய பதவீ.)

"எப்பொருளிலும் தானிருப்பானும் எப்பொருளுக்கும் தானிருப்பிடமாய் உள்ளான். பழியும் மாசும் பூண்டு மழுங்கிய பொருள்களையும் விலகி நில்லாது இலங்குகின்றான். ஈதன்றோ அவனருள் இருந்தபடி. 'தன்னுடைமையை விடமாட்டாமையாலே அழுக்கை விரும்புமவன்''; ஆதலினால் அருள்வருமோ என அஞ்சவேண்டாம்.

நரகாந்தகன்

அவனே தன் அன்பு மேலிடுதலால் நம்மேல் விழா நிற்க நடுவே பகையும் போய்க்கொடு நிற்குமன்றே. நரகாசுரனைக் கொன்றழித்து நல்லார்க்கும் நல்லியலாருக்கும் அருள் செய்தானன்றோ! உலகினைப் பன்றியாய்க் குத்தி எடுத்து வருகையில், இறைவனது திருமேனி பட்டதும் உலகமாமன்னை உவந்து பெற்ற பிள்ளையே இக்கொடியோன். அவனே கொடுமை செய்யத் தலைப்பட்டபோது அவ்வுலகன்னையோடும் அவனெதிர் சென்று அம்மகனைக் கொன்றழித்து அடியவர்க் கருள்செய்யும் நடுவுநிலை யுடைய பெரியோன் இவனன்றி வேறு யாருளர்.

பித்தனே

கண்கவர் கட்டழகன்; ஒப்பனைசெய்து உவந்தவன். நம்மை நோக்கி நல்லருள் புரியவந்து நலந்திகழ் இடத்தில்நடுவே நம்மைத்தழுவுபவன்; தோன்றாத் துணையாகித் தொட்டதொட்ட இடந்தோறும் தொல் வடிவம் காட்டுபவன்; தொலையாத பழியுடையாரையும் தூயராக்கித் துயரொழித்து அவரோடே தொல்லையின் பத்திற் றோய்வான். இது கண்டும் எவரேனும் தாம் தகுதியற்றவர் என அஞ்சிநின்றால், அன்னோர் குற்றமே பெரிதுடையாராலும் அவரை யிழக்க மனம் பொறாமல் அவரைக் குளிர்நோக்கிக் குரவையாடக் கைகொடுத் திழுப்பவன். இடையே முட்டுக்கட்டையாய் நின்றாரைத் தண்ணருளாம் தனித்தாயொடும் வந்து தகர்த்தெறிவான். இவற்றை எண்ணும்போதே எமக்குப் பித்தேறுகின்றது.

ஆட்செயும்

இறைவன் மனைவியோடு வாழ்கின்றான். நாமும் மனைவி மக்களோடு வாழ்தல் தக்கதாம். ஆனால் அவர் நெறியில் நில்லாது அறநெறியாகிய அன்புநெறியில் நின்று தனது மனையாளோடுமே சென்று அவள் பெற்றமக்கள் கொடியோராயின் கொன்றே குவிக்கும் நடுநிலையுடையவன். அப்பெருந்தாயும் அவ்வறநிலையில் கட்டுண்டு கிடக்கின்றாள் நாமும் இவ்வாறு அறத்திற் கட்டுண்ட அன்புடைய மனையாளோடு நடுவுநிலையின் நின்று உலகவாழ்க்கையை அறிவுநெறியாகிய அறநெறியில் நடத்தமுடியுமாயின் அஃதொரு மனைமாட்சியேயாகும். இந்நிலையில் அறிவு எனும் வில்லாகிய சார்ங்கம் ஏந்திய அருள்வடிவினனுக்கு அடிமையாகின்றோம். அவர் வடிவினதாகிய கருப்புவில்லேந்திமருள் வடிவினனாகிய கருப்புவில்லி நமக்கு அடிமையாகின்றான். கண்டகண்ட பெண்கள்மேலே கருத்தைச்செலுத்திக் காதல்கொண்டு கற்பழிக்கப் புகுவார் கருப்புவில்லிக் காட்செயும் கயவரே யாவர். கருப்புவில்லியின் கைக்கடங்கிய அறிவிலாவில்லுக்கு மாட்செய்யும் அலிகளே இன்னோர் ஐந்தடக்கலாற்றிப் பெரியோராய் ஐம்புல இன்பத்தையும் அறநெறியே துய்ப்பவர்,

ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பும் நெறியின் புறஞ்செலா

என்றபடி ஐம்பொறியை அடக்கிநிற்பவர் ஆவார். ஈதே இயற்கைத்துறவு இவர்களே கருப்புவில்லியைத் தமக் காட்செய விலைக்குக்கொண்டவர் ஆவர். சிவபெருமான் கருப்புவில்லியைக் கொன்றான், ஆனால் மலைமகளை மணந்தான். கருப்புவில்லியை அடிமையாக்கிக் காதல் நிகழ்வதைக் குறிக்கின்ற திக்கதை. அவ்வாறு வாழாது, மருளின் அடிமையாகிய அவாவிற்கடிமையாயின் உலகம் அழியும் என்க. இவ்வாறு ஆட்செய்வதே இழித்துரைக்கத் தக்கதாகும்.

மாரனார்

அத்தகையாருக்குக் கருப்புவில்லி இறப்பையும் தரும் மாரனாகின்றான்.

வரிவெம் சிலை

அழகியவில் வரிந்துகட்டிய வில்லாகின்றது, விரும்பத்தக்க கரும்பு அஞ்சத்தக்கதாய்க் கொன்றேதொலைக்கும் கொடியவில்லாகின்றது. அவாவிற்கடிமையாகாது அன்புவழி நின்றாருக்கோ அவ்வில் இறந்தொழிந்த காற்றாள் கையில் உள்ளதாய், வண்டுகள் சூழ்ந்து பாடும் வரிப்பாட்டு மிகுந்ததாய், எல்லோராலும் விரும்பப்படுவதாய் விளையாட்டிற்கெனக் கரும்பிற் செய்ததொரு வில்லாகின்றது.

பாரினரோடும்

உலகம் பார்க்கப்படும் பொருளாதலின் பார் எனப் பெயர் பெற்றது. எனவே இம்மாக்கள் தோற்றத்திற் கடிமையாய் வாழ்ந்தொழிகின்றனர். உலகிற்கொரு முதல்வன் உலகெங்கும் உள்ளீடாக ஒளிர்வதனைக் கண்டுணர்வதில்லை

கூடுவதில்லையான்

இத்தகைய உலகத்தினரில் ஒருவரோடும் யான் கூடுவதில்லை;

உண்டி யேயுடை யேயுகந் தோடுமிம்
மண்டலத் தோடுங் கூடுவ தில்லையான்
அண்ட வாண னரங்கன் வன்பேய்முலை
உண்ட வாயன்ற னுன்மத்தன் காண்மினே 4

[உண்டி - உணவு; உடை - துணி; உகந்து - மிகுதியும் விரும்பி; மண்டலம் - உலகம்; அண்டவாணன் - மோக்ஷத்தில் வாழ்பவன்; பேய் - பூதகி; உன்மத்தன் - பித்தன்]

உண்டியே

உடலை உயிரோடுகூட்டிக் கடவுளை அடைய வழிபாடியற்ற வழிசெய் தமைப்பது உண்டியே யாகும்.

உடையே

மானத்தைக்காத்து, மாக்களினும் மக்களை உயர்ந்தோராக்குவது உடையேயாகும்,(உகப்பே உயர்வு). இவற்றை நாடிநிற்பது இயல்பே யாகும்.

உகந்து

ஆனால் இவற்றில் அளவுகடந்த அவா வுடையாரே அறிவிலிகள்ஆவர். உயிர்வாழ உண்ணாது,உண்ணுதற்கென்றே உயிர்வாழ்ந்து நாவின்பம் கருதி உண்பவன் மக்களில் ஒருவன் அல்லன், மாக்களில் ஒருவன் அல்லன், இயற்கைப் பரப்பில் எதுவும் அல்லன். அவ்வியல்புடையன அவையல்ல. ஆதலின் இயற்கையோடு பகைத்துநிற்கும் அறக் கொடியோனே அவன் என்க. இரண்டு விரல் அளவினதாகிய இந்தவொரு நாக்கினை, அடக்கியாள முடியாமையால் அன்றோ நோய்வாய்ப்பட்டும் பேய்க்கோட்பட்டும் மாக்கள் அலைகின்றனர். வயிற்றிற்குமோ ரளவுண்மையால் இடையீடின்றி உண்பது இயலாததாகின்றது. ஆதலின் வாய்க்குள் விரலிட்டுக் குத்தி உண்டவற்றை வெளிப்படுத்தி மறுபடியும் மாம்பழம் உண்பாரை என் என்பது? மானத்திற்குத் துணிகட்டுவதைவிட்டு உடையே உயிரும் உடலும் என்று உழல்வாரை என் என்பது; ஓர் உடை தைக்க எத்துணைத் தையல் வேலைசெய்வார்: எத்துணைப் பொன்? எத்துணை முத்து,எத்துணைப் பெயர் அதைப் பின்னின்று சுமந்துசெல்வர்! சுமக்க இயலாதபோதும் வெளிப்பகட்டிற்காகச் சுமந்து செல்லும் இப்பிணந்தூக்கிகளின் கேடுகெட்ட அறிவை என் என்பது? தலைமயிரைப் பலவகையாகக் கோதிமுடித்து இரவெல்லாம் பலபொறிகளிடையே அழுத்திவைத்து அப்புறமும் இப்புறமும் திரும்பாமே படுத்துஇருந்து பல நாள் ஒப்பனை செய்வதனை என் என்பது. ஈதோ வாழ்வு!

ஓடும்

இவ்வாறு இடர்ப்படுவார், நற்பொருளையும் இவற்றுடனே நாடிநிற்பாரோ? இல்லை இல்லை. அஃதியலுவதொன்றன்று. வேறொன்றும் வேண்டாது உண்டியே உடையே என்றே உழல்கின்றனர். நெருப்புப்பற்றிய போது வீட்டினின்றும் தப்பி ஓடுவார் என்ன பரபரப்போடும் ஓடுவரோ அஃதேபோலத் தாம்வேண்டும் உயரிய உடைகளில் ஒருநூல் குறைந்தாலும், சுவை நிரம்பிய உணவில் ஓர் அரிசி குறைந்தாலும் பரபரப்பாக ஓடி உழல்கின்றனர். சிறைவிரித்தாடும் மயிலும் கொண்டையோடு குலவும் மீன்குத்தியும் போன்று பலநிறம் கொண்ட பறவைகளும், தூய அறிவுபோல விளங்கும் அன்னப்பறவையும் வால்நீண்ட கருங்குருவியும் அழகியகுப்பாயும் போர்த்துலவுகின்றன. மீன்களும் பூச்சிகளும் பலநிற விளக்கெனப் பொலியும் உடைதாங்கி ஒளிர்கின்றன. பறவைகளும் விலங்குகளும் பசும்புல்லும் பழமரமும் எத்துணை யழகிய உடையும் இனிய உணவும் உண்டுடுத்து வாழ்கின்றன. இவ்வுலகமாக்கள் இன்னும்பல வூழி முயன்றாலும் அவ்வூணும் அவ்வுடையும் அடைதல் ஆவதோ? ஆனால் அவை ஓடியலைந்தோ அவற்றைப் பெறுகின்றன. புல்லும் மரமும் வேர்வழியாக ஓடுவதன்றி வேறெங்கும் போதல் கூடுமோ? இவையும் இறைவனது இயற்கைவழியே நின்று ஊணும் உடையும் பெற்று இன்புறுகின்றன. இவ்வுலகத்தினர் ஓடியுழைக்கின்றனர்; ஆனால் வேண்டியவற்றைப் பெறுகின்றனரோ? அதனைச் சொல்லவும் வேண்டுமோ? உழைப்பன்றி ஊதியத்தை உலகினர் ஒருநாளும் உணர்ந்ததில்லை.

இம்மண்டலம் தன்னோடும்

இவர்கள் வாழ்வது மண்ணுல காதலின் (மண்தலம்) மண்ணேயாய் அழிகின்றனர். மண்ணாகியும் அறிவொடும் கலந்த உடலை முற்றும் அறிவாக்க முயலாது பின்னும் சிறிதறிவினின்றும் கழன்று மண்ணாகவே முந்துகின்றனர் - அன்றியும் இவ்வுலகம் வட்டவடிவினதாகும் (மண்டலம்—வளைவு). அஃதேபோல இவ்வுலகினரும் வழியில் நேரேசெல்வதன்றி வளைந்து செல்கின்றனர். வேண்டிய உண்டியை உண்டு மேற்செல்லாது உண்டியில் பலவகையினைக் கண்டுபிடித்து அதற்குவேண்டிய பொருள்களை நாடி உயிர்வாழ்க்கை முழுதும் பல அடிமைகளாம் மடையர்களைத் தேடி நிற்பர். உண்பதையும் மறப்பர்: ஒருசுவை குறையினும் உண்ணாது வருந்துவர்.உடையை மறந்து உடையின் பலவகைப் பகட்டை நாடிச்செல்வர். வட்டவடிவானபொருளில் சுற்றி நேரே சென்றுகொண்டிருந்தால் தொடங்கிய இடத்திற்கே வந்து வந்து வளைந்து போதல்போல இவ்வுலகத்தினரும் தின்றதையே தின்றும் உடுத்ததையே உடுத்தும் பழைய நிலையிலேயே நின்று வெளிவர அஞ்சிப் பதுங்கிக் கிடப்பர்; மேனிலைசெல்ல விரும்பவும் செய்யார்.

கூடுவதில்லையான்

இத்தகையாரோடு நான் கூடுவதில்லை. யானோ 'உண்ணுஞ்சோறும் பருகுநீர் தின்னும்வெற்றிலையும்எல்லாம் கண்ணன்' என்றிருப்பேன். அவர்களைப்போல உண்பேன் உடுப்பேன். ஆனால் அவை எல்லாம் கண்ணனே என அறிந்து உயர் நிலை எய்தினேன்.

அண்டவாணன்

அக்கண்ணனே யன்றி இவை எல்லாமாய் இருப்பவர் வேறுயார்? அவனே வீட்டுலகில் வாழ்பவன்.

அரங்கன்

ஆனல், நம் நாட்டில் வந்து புகுந்த தன்னருளாய அரங்கத்தழகன் அவன் செல்வச் செருக்கால் நம்மைப் புறக்கணிப்பானே?

ஆயன்

அவனெளிவந்த நிலையை ஆயனுப்க் குழவியாய் நின்ற அருணிலை காட்டவில்லையோ? அருளும் அறிவும் பெற்றால் அவற்றைப் பேணிப் போற்றும் போராற்றல் எமக்கிலையே என அஞ்சுதல் வேண்டாம். அன்பு வடிவான அசோதைக்கு அருள்வடிவான திருக்குழவியாய்ப் பிறந்தான். எல்லார்க் குமரியவனே எல்லார்க்கும் எளியவனுக்கிய அசோதை அவனைக் காத்தல் கூடுமோ? பேய்ச்சி வந்தபோது அவள் என்ன செய்தல்கூடும் ? இவனேதான் காத்தல்வேண்டும் ?

வன்பேய்

பேயும் குழவிமுகம் நோக்கிப் பெரிதும் மனம் இரங்கும். அவ்வா றிரங்காத இப்பேயோ கல்லினும் வலிய மனமுடைய வன் பேயாகும். பேற்றையும் தருவான்; போற்றியும் காப்பான். குழவிச் செயலிலேயே ஒருதிருவிளையாடல் புரிந்தான்.

பேய்முலை உண்டவாயன்

பாலுண்டேபழியுடையாளை அழித்தருளினன். அவனுக்கு நஞ்சமும் அமுதமாகும். அனைத்தும் அவனுடைய அமைப்பன்றே! ஆதலின் உண்ணவும் உடுக்கவும் அவன் தருவதே அமையும் என நிற்பேன். பழியுடையாளின் உயிரினைக் குடித்தவாய், பண்டுபோலச் செக்கச் சிவந்து தித்தித்திருந்ததன்றே? அவன் மறச் செயலும் அன்புச்செயலே ஆகும்.

உன்மத்தன்

இவற்றைஎல்லாம் எண்ணினல் என்மனம் பித்தேறி நிற்கின்றது. என்பித்து நின்றவாறு இவ்வுலகில் அருமையில் அருமை யாதலின் நீர் காண்மினே

காண்மினே

பெண்கள் திறத்திலே பற்றுகைக்கு மருந்திடுகை பண்ணினரை மீட்க ஒண்ணததுபோலவே அவனுடைய பண்புகளிலே அகப்பட்டுப் பித்தனயினேன். பித்தன் என ஏசுவீர், என்பித்தினைக் காண்மினே?

தமிழ்ப் பாடம் 84.

[அஷ்ட பிரபந்தம்.]

[613-வது பக்கத் தொடர்ச்சி]

திருவேங்கட மாலை

கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி யுங்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே—பூங்
[கைக்குண்
மெய்த்தவளச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கை
வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு. 15. [தலை

பதப்பிரிவு:—கோங்கை கோடு ஏறி குலுக்கும் அரியும் கரியும் வேங்கை கோடு ஆதரிக்கும்—வேங்கைக்கு ஓடாது அரிக்கும்—வேங்கடமே பூ கைக்குள் மெய் தவளம் சங்கு எடுத்தார் மேகலை விட்டு அம் கை தலை வைத்தவள் அச்சம் கெடுத்தார் வாழ்வு.

பதவுரை.

கோடு - கிளையில்
ஏறி - ஏறி
கோங்கை - கோங்கு என்னும் மரத்தை
குலுக்கும் - குலுக்குகின்ற
அரியும் - குரங்குகளும்
வேங்கை - அருகிலிருக்கும் வேங்கை மரத்தின்
கோடு - கிளையை
ஆதரிக்கும் - விரும்பிப் பிடித்துக்கொள்வதற்கு
கரியும் - யானையும் [இடமானதும்,
வேங்கைக்கு - வேங்கைப்புலிக்கு
ஓடாது - பயந்து ஓடாது
அரிக்கும் - அதனை எதிர்த்து அழிப்பதற்கும் இட
வேங்கடமே - வேங்கடமலைதான், [மானதுமான

பூ - தனது அழகிய, கைக்குள் - கரங்களில், மெய் - உண்மையான, தவளம் - வெண்ணிறமமைந்த, சங்கு - சங்கத்தை, எடுத்தார் - தாங்கியவரும்; மேகலை -தான் பற்றியிருந்த புடவையை, விட்டு-விட்டு, அம்- அழகிய, கை-தனது கைகளை, தலை-தலையின்மேல்,வைத்தவள் - வைத்துக் கொண்டவளாகிய திரௌபதியின், அச்சம் - பயத்தை, கெடுத்தார் - நீக்கினவருமான திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:—கோங்கிலிருந்து வேங்கை மரத்திற்குத் தாவுகின்ற குரங்குகளும், புலிக்கு அஞ்சி ஓடாத யானைகளும் உள்ளது திருவேங்கடமலை யென்பது முதலிரண்டடிகளின் பொருள். 'வேங்கை கோடு ஆதரிக்கும்' எனப் பிரிந்து குரங்கிற்குப், 'வேங்கைக்கு ஓடாது அரிக்கும்' எனப் பிரிந்து யானைக்கும் அத்தொடர் பொருந்துவதால் பிரிமொழிச் சிலேடை. பாஞ்சசந்யம் என்னும் வெண்மையான சங்கைத் திருமால் கையில் வைத்திருப்பதையும், அவர் திரௌபதியின் மானத்தைக் காத்ததையும் பின்னிரண்டடிகள் கூறுகின்றன. தன்னுடைய முயற்சியால் தன்னைக் காத்துக்கொள்ளலாம் என்ற நினைவோடு, துகிலைத் துச்சாசனன் அவிழ்க்கமுடியாமல் அவள் பிடித்துக் கொண்டிருந்தவரையில் திருமால் தானும் சும்மாவிருந்து பிறகு அவள் தன் பிடிவிட்டுக் கையைத் தலைமேல் வைத்து 'நீயே கதி' என்று நின்றவுடன் வந்து உதவினர்.

குறிப்பு:—குலுக்கும் + அரி = குலுக்குமரி, என்று வந்ததும், வைத்தவள் + அச்சம் = வைத்தவளச்சம் என்று வந்ததும், நிலைமொழி ஈற்று மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறி இயற்கையாகப் புணரும் என்ற பொதுவிதிக்கு உதாரணங்கள்.

ஆயுந் துறவறத்தை யண்டினமுத் தண்டினரும்
வேயுங் கிளைவிட்ட வேங்கடமே—தோயுந்
தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த
வுயிர்க்காத்தாங் கட்டுண்டா ரூர். 16.

பதப்பிரிவு:—ஆயும் துறவு அறத்தை அண்டின முதண்டினரும் வேயும் கிளை விட்ட வேங்கடமே தோயும் தயிர்க்கு ஆ தாம் கட்டு உண்டார் தாரணியில் தந்த உயிர் காத்து ஆங்கு அட்டு உண்டார் ஊர்.

பதவுரை.

ஆயும் - ஆராய்ந்து அறிந்த
துறவு அறத்தை - சந்நியாசத்தை
அண்டின - சேர்ந்த
முத் தண்டினரும் - திரிதண்டம் தாங்கியுள துறவி
கிளை - தமது சுற்றத்தாரை [களும்,
விட்ட - விடுவதற்கு இடமாயிருப்பதும்;
வேயும் - மூங்கில்களும்
கிளை - கிளைகளை
விட்ட - விட்டு வளர்வதற்கும் இடமாயிருப்பதும்
வேங்கடமே - வேங்கடமலைதான், [ஆன

தோயும் - தோய்ந்த, தயிர்க்கு ஆ - தயிரைத் திருடியதற்காக, தாம் - தாம், கட்டு உண்டார் - யசோதையால் கட்டப்பட்டவரும், தாரணியில் - பூமியில், உயிர் - உயிர்களை, தந்து - சிருஷ்டித்து, காத்து - பாதுகாத்து, ஆங்கு - அப்புறம், அட்டு - அழித்து, உண்டார் - பிரளயகாலத்தில் உண்டவருமான திருமால் விரும்புகின்ற, ஊர் - ஊர் ஆகும்.

விரிவுரை:—துறவிகளும் மூங்கிலும் "கிளைவிட்ட" வேங்கடம் என உரைப்பதில் கிளை விட்ட என்னும் இருபதங்களும் மாறுமல் அப்படியேநின்று பொருள் மாத்திரம் வேறு வேறு தருவதால், இது செம்மொழிச்சிலேடை.

பாம்புங் குளிர்சந்தின் பக்கத்தி னிற்கின்ற
வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே—காம்புகர
மானவரை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து
மானவரை நன்குடையார் வாழ்வு. 17.

பதப்பிரிவு:—பாம்பும் குளிர் சந்தின் பக்கத்தில் நிற்கின்ற வேம்பும் மருத்து உவக்கும்—மரு துவக்கும்—வேங்கடமே காம்பு கரம் ஆன வரை நன் குடையார் ஆள் ஆய் தொழுது ஏத்தும் மானவரை நன்கு உடையார் வாழ்வு.

பதவுரை.

பாம்பும் - பாம்புகளும்
மருத்து - காற்றை
உவக்கும் - விரும்பிக் குடிப்பதற்கு இடமானதும்;
குளிர் - குளிர்ந்த
சந்தின் - சந்தன மரத்தின்
பக்கத்தில் - பக்கத்தில்
நின்ற - வளர்ந்து நின்ற
வேம்பும் - வேப்பமரங்களும்
மரு - வாசனை வீச
துவக்கும் - ஆரம்பிப்பதற்கு இடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்.

கரம் - தனது கையே, காம்பு ஆன - காம்பு ஆகும் படி, வரை - கோவர்த்தனமலையை, நல்-நல்ல, குடையார் - குடையாக ஏந்திப் பசுக்களைக் காத்தவரும், ஆள் ஆய்-தனக்குத் தொண்டர் ஆகி, ஏத்தும் - புகழ்கின்ற, மானவரை - மனிதர்களை, நன்கு - அதிகமாக, உடையார் - உடையவருமான திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:—பாம்பு காற்றை ஆகாரமாகக் கொள்ளும் பிராணி என்று கருதுவார். இம்மலையிலுள்ள காற்று மிகவும் மணம் பொருந்தியதா யிருக்குமாதலால் இக்காற்றைப் பாம்புகள் மிகவும் விரும்பிக்குடிக்குமாம். மருத்து என்பதற்குக் காற்று என்பது அர்த்தம். பாம்பு, மருத்து உவக்கும், என்று பிரித்துக் கொள்ளவேண்டும் சந்தனமரத்தின் பக்கத்தில் நிற்கின்ற வேப்பமரமும் சந்தனத்தோடு சேர்ந்து சேர்ந்து தானும் வாசனைவீச ஆரம்பிக்குமாம். மரு என்ருல் வாசனை என்பது அர்த்தம்—வேம்பும், மரு துவக்கும், எனப்பிரித்துக் கொள்ளவேண்டும். இது பிரிமொழிச்சிலேடை

இந்திரன் விளைவித்த சோனைமாரியிலிருந்து தான் மேய்த்த பசுக்கூட்டத்தைக் காப்பதற்காகக் கண்ணபிரான் கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப் பிடித்த கதையும், திருமால் மனிதர்களிற் பலரைத் தனக்குப் பக்தர்களாய் உடையவர் என்பதும் பின்னிரண்டடிகளில் கூறப்பட்டிருக்கின்றன. காம்பு கரம் ஆனவரை, என்பதற்கு இவரது கையே அம்மலையாகிய குடையைப் பிடிப்பதற்குக் காம்பு ஆயிற்று, என்பது பொருள். மானவரை நன்குடையார், மானவரை நன்குடையார், என்று ஓர் அடியில் வந்த எழுத்துக்களை மீண்டும் முதலெழுத்தும் உள்பட மறு அடியிலும் வந்திருப்பதால் சொல்லணியில் இது மடக்கு அணி ஆகும். முன்பாட்டைப்போல முதலெழுத்து மாத்திரம் வேருயிருக்குமானல் திரிபு அணி என்பதாகும்.

குறிப்பு:—கரம் + ஆன - கரமான, என்று புணர்ந்ததும், ஆள் + ஆய் = ஆளாய், என்று புணர்ந்ததும் பொதுவிதியின்படி ஆயின. கரம் என்பது மூன்றெழுத்துச்சொல், ஆதலால் கரம்மாய் என்ருக வில்லை. ஆள் என்பது இரண்டெழுத்துச் சொல்லாயிருப்பினும் முதலெழுத்து நெடிலாதலால் 'ஆள்ளாய்' என்று ஆகவில்லை.

இலக்கணம்

189067

நிலைமொழியிறுதியிலுள்ள மெய்யெழுத்தும் வருமொழி முதலிலுள்ள உயிரும் புணரும்போது எப்படியாகும் என்பதைச் சொல்லிவருகின்றேம். இதுவரையில் சொன்ன விதிகள், நிலைமொழி யிறுதியில் இருக்கின்ற மெய் மகரமெய் தவிர வேறு எந்த மெய்யானலும், வருமொழிமுதலில் வருகின்ற உயிர் எந்த உயிரானலும், பொருந்தும். அதுவுமன்றி நிலைமொழியும் வருமொழியுந் தொடர்கின்ற தொடர் எந்தத் தொடராயினும், நிலைமொழி மகரமெய்யை ஈற்றிலுடையதாக இல்லாமற்போனல், புணர்ச்சி விதி இதுவேதான்.

மெய்யெழுத்துக்கள், க் ங் ச் ஞ் என்ற வரிசையில் இருக்கின்ற பதினெட் டாகும். தமிழ்ப்பாஷையில் இந்தப் பதினெட்டு எழுத்துக்கள் எல்லாம் மொழிக்கு இறுதியில் வரக்கூடியன வல்ல. மெய்யெழுத்துக்களில் க் ச் ட் த் ப் ற், என்ற ஆறும் வல்லினமென்றும், ங் ஞ் ண் ந் ம் ன், என்ற ஆறும் மெல்லினமென்றும், ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறும் இடையினமென்றும், உச்சரிக்கின்ற முறைக்கு இணங்கிப் பிரிக்கப்பட்டிருக்கின்றன வென்பதை முன்னரே சொல்லியிருக்கின்றேம். இவைகளில் வல்லினத்தைச்சேர்ந்த மெய்யெழுத்து, ஒன்றும் மொழிக்கு இறுதியில் வராது. மெல்லினத்தில், ங், மொழிக்கு இறுதியில்

வராது, மற்ற ஐந்து எழுத்துக்களும் வரும். இடையின மெய்யெழுத்து ஆறும் இறுதியில் வரும். ஆகையால் மெய்யெழுத்துப் பதினெட்டில், மொழியின் இறுதியில் நிற்பன, ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள், என்னும் பதினொன்றே யாகும். இந்தப் பதினொன்றில் ம் தவிர மற்றப் பத்தெழுத்துக்களில் நிலைமொழி இறுதியில் இருப்பது எந்த மெய்யெழுத்தானாலும் வருமொழி முதலில் இருக்கும் உயிர் எதுவானாலும், அவை என்ன தொடரானாலும் முன் சொன்ன விதிகளுக்கு இணங்கிப் புணரும்.

அவ்விதிகளாவன:—

i. நிலைமொழி இரண்டெழுத்திற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆன சொல்லாயின், வருகின்ற உயிர் நிற்கின்ற மெய்யின்மேல் ஏறி உயிர்மெய் ஆய்விடும். இது இயல்புப் புணர்ச்சி. உதாரணம்—

சூரியன் + உதித்தான் = சூரியனுதித்தான்; எழுவாய்த் [தொடர்.
இகல் + அழித்தான் = இகலழித்தான்; இரண்டாம் [வேற்றுமைத் தொகை.
மாதர் + ஆட்டம் = மாதராட்டம்; ஆறும் வேற்றுமைத் [தொகை.
அதன் + எலும்பு = அதனெலும்பு; உம்மைத்தொகை
வெரிந் + ஏற்றினன் = வெரிநேற்றினன். ஏழாம் வேற்றுமைத் தொகை. [வெரிந்-முதுகு]

ii. நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாயிருப்பினும், முதலெழுத்து நெடிலா யிருக்குமாயின், முன் விதிப்படியே, ஈற்றுமெய்யும் முதலுயிரும் சேர்ந்து உயிர்மெய் யாகிவிடும். உதாரணம்—

பாய் + அலை = பாயலை; வினைத்தொகை.
நாண் + இல்லை = நாணில்லை; எழுவாய்த் தொடர்.
ஊழ் + உரம் = ஊழுரம்; ஆறும்வேற்றுமைத்தொகை.

iii. நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாகி, அதனில் முதலெழுத்தும் குறிலாக இருக்குமானால், அந்நிலைமொழி இறுதியிலுள்ள மெய்யெழுத்து வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும்போது, அந்த மெய் இரண்டாக விரிந்து ஒன்று அப்படியேயிருக்க மற்றது அவ்வுயிரை ஏற்றுக்கொள்ளும்-இது விகாரப்புணர்ச்சி. உதாரணம்—

விண் + ஒளி = விண்ணொளி; ஆறும்வேற்றுமைத்தொகை
கல் + உடைத்தான் = கல்லுடைத்தான்; இரண்டாம்வேற்றுமைத் தொகை.
கள் + ஊறியது = கள்ளூறியது எழுவாய்த் தொடர்,
செய் + அரசே = செய்யரசே; வினைமுற்றுத் தொடர்.

இவ்வுதாரணங்களிலெல்லாம் நிலைமொழியும் வருமொழியும் என்ன பொருளில் தொடர்ந்த போதிலும் இறுதிமெய்யும் முதலுயிரும் புணர்கின்ற விதத்தில் பேதமில்லாதிருக்கக் காண்பீர். ஆனால், நிலைமொழி இறுதி மகரமெய்யா யிருக்குமானால் அது வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும்போது தொடருக்குத் தக்கபடி ஒவ்வோர் சமயம் வித்தியாசப்படும். அவைகளை அடுத்தநாள் கற்போம்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

காண்டவ தகனச் சருக்கம்.

கொண்டல் வாகனன் கொண்மூக்கொண்டு கொழுந்தினை யவிப்பதன் முன்னர், சுவேத வாகனன் சூர்வெங்கணைகளைப்பரப்பி
605 பக்கத் தொடர்ச்சி
யவ் வனற்கடவுளுக்கொரு கொற்றக் குடை தந்தான். மாரிக்காலத்து மனிதராற் பிடிக்கப்படும் குடைகள் அவர் தலைகளைமட்டுங் காத்துப் பிறவுறுப்பினைக்காவாததுபோ லன்றி, ஏவுகூர் வாளியால் யாக்கப்பட்டவவ் வான்கவிகை, காண்டவ வனத்தை முற்றுங் காத்துத் திவலையேது முட்புகாமற் றடுத்தது.

ஆழ்தரு பரவை யேழும் வற்றிடமா
றழித்தகா ருமிழ்ந்திடு நெடுநீர்
தாழ்தரு சரத்தான் மேய்ந்ததற் கிடையோர்
தனித்தி வலையும் பொசியாமல்
வீழ்தரு மருவி பாவகன் றனக்கு
விசயனன் றளித்தபொற் குடைக்குச்
சூழ்தர நிரைத்துத் தூக்கிய முத்தின்
சுடர்மணித் தொடையல் போன்றனவே.

[ஆழத்தையுடைய ஏழு கடல்களும் வற்றும்படி யவற்றின் நீரை யுண்டழித்த மேகமானது உமிழ்ந்திடும் பெருமழை,சரிவாக அம்பினால் வனைந்த அக்குடைக்குள் ஒரு தனித்துளியும் கசியாமல், பக்கங்களில் அருவிபோல் விழுவது, அக்கினிக்கு அன்று அருச்சுனன் அளித்த மேலான குடைக்குச் சுற்றிலும் வரிசைப்படத் தூக்கிய முத்தின் ஒளிபொருந்திய அழகிய மாலைபோன்று இருந்தது]

கூடாரம்போல் வட்டமா யமைக்கப்பட்ட சரக்கூடத்தின்மேற் பொழியும் மழை அதைச்சுற்றித் தாரை தாரையாய் விழுவதியற்கை. அதை நாமனைவரும் கண்டுமிருக்கிறோம். அவ்வாறு விழும் நீர்த்தாரைகள் இளவேனிற்காலத்துச் சூரிய வொளியில், திவலையின் பின் நின்று நோக்குவார்க்குப் பற்பல நிறத்தொடு மிளிரும். அத்துளிகளை யாங்கிலர் வைரத்தோ டொப்பிடுவர். நமது நாட்டிற் பருமையிலும், நீரோட்டத்திலும் சிறந்த வைரங்கள் கணக்கற்றன விருந்தன வெனினும், நமது கவிகள் நிறத்திலும் வடிவிலுமொத்த முத்தையே பெரிதும்பாராட்டிவந்தனர். எனவே நமது ஆசிரியரும் அம்பினால் வேய்ந்தவக் குடையினின் றொழுகிய நீர்த்துளிகட் குவமையாகத் தரளத்தையே கூறினார். இவ்வுவமையின் பொருத்தத்தையுணர்ந்து வியவாதார் மிகச்சிலரே யாவர். இதற்கு முன்னும் முழுப்பொறி சிந்தின காளமுகில்களெனக் கவி கூறியது மிங்கே எடுத்துரைக்கற்பாலது. மேகங்கள் அளக்கரு மளக்கரிற் படிந்து நீரை யுறிஞ்சியபின்ன ரதனை வெளிப்படுத்தும் செய்கை யுமிழ்தற் கொப்பிடப்பட்டதும் மிகவும் பொருத்தமுடையதே யாகும். தாழ்தரு சரமென்றதற்கு நீளமான சரமென்றுவது சரிந்த சரமென்றுவது பொருள் கூறலாம். மேய்ந்ததென்றது மூடினதை.

மண்டிமீ தெழுந்த வன்னியின் சிகைக
ளிந்திரன் மதலை வாளிகளாற்
கண்ட கூடத்திற் கமைத்த செம்பவளக்
காண்டகு தூண்டிரள் காட்ட
வண்டகூடத்திற் கிந்திரன் பளிங்கா
லமைத்த பல்லாயிர கோடி
சண்ட தூணங்கள் போன்றன பரந்து
தனித்தனி முகில்பொழி தாரை.

[மூண்டு மேலெழுந்த அக்கினியின் சுவாலைகள் இந்திரன் பிள்ளையாகிய அருச்சுனன் அம்புகளாற் சமைத்த சரக்கூடத்தைத் தாங்குவதற்குக் கட்டிய சிவந்த பார்க்கத்தகுந்த (அழகிய) பவளத்தூண் கூட்டத்தை ஒத்திருக்கவும், எங்கும் பாவித் தனித் தனியாக மேகங்கள் சொரிந்த தாரைகள் இந்திரன் ஆகாயத்திற்குப் பளிங்காலமைத்த கணக்கற்ற வலிகொண்ட தூண்கள் போன்றிருந்தன]

அருச்சுனன் தூக்கிய அம்புக் கூடம் அம்பலத்தில் ஆதரவற்று நின்றதேயென் றுலகமெண்ணக்கூடுமாதலால் அதைத் தாங்கி நிற்குந் தூண்களைக் கவி யமைத்தார் அவையே மண்டி மீதெழுந்த வன்னியின் சிகைகள். அவை சிவந்த நிறமுடையனவாய்ப் பரந்த பரவையினகத்தே சுயேச்சையாய்ப் படரும் பவளக்கொடி போற் சரக்கூடத்தை பெட்டி நிமிர்ந்து நின்றன. அக்காட்சி காண்டகு காட்சியாயினதற் கையமுண்டோ? வானின்று பெய்யும் நீர்த்தாரைக ளவ்வண்டத்தைத் தாங்கிநிற்கும் பல்கோடி நூறுயிரம் பளிங்குத் தூண்களாயின.

இவ்விரு செய்யுட்களின் செவ்வியை நோக்கிற் கவியின் வேலைப்பாடு வெளியாவதுமன்றி யவ் விச்சருக்கத்தைப் பதனிட்டமைத்த பண்பை பெரிதும் பாராட்டத்தக்க தெனவும் விளங்காநிற்கும்.

இக்கோலத்தைக்கண்ட விண்ணவர்குழாந் தக்ககனை நாற்புறமும் நாடின. அச்சமய மவன்மனையாட்டி தன் குழவியைவிழுங்கி யந்தரத்தெழுந்தாள். எழலும்,

வீழ்த்தின னம்பினாற் றனித்துச்
செக்கன வுருவச் சென்னியை
யுரகர் கன்னியைத் திருமணஞ் செய்தான்.

நாககன்னியைத் திருமணஞ் செய்த நரன், அவள் தன் தலையைத் துணித்துச் செங்கனலில் விழ வீழ்த்தினன். நாகருறவையும் பெண்பாலென்பதையுங் கருதாதுதா னக்கினிக் களித்தவாக்கையே காக்கவேண்டியவளைக் கனலிடை வீழ்த்தினன். ஈதன்றோ மேலோர் செய்கை? அச்சமயம் அவன் மனம் தன்கடமைக்கும் மனச்சாக்ஷிக்கும் இடையினின் றாசலாடி ஊளந்திருக்கு மன்றோ? இதைக்கண்ட வாசவன் எழிலித்தாரையாலும், வருணக்கணைகொண்டும் தணலையவித்துத் தோழன் தனையனைத் தப்புவித்தான். அச்சுவசேனனென்னுமச் சிறுவனும் அருச்சுனனுக்குப் பகையாவனெனக் காடெங்குமுசாவிக் கன்னனை யடைக்கலம் புகுந்தான். தக்ககனைக் காணோமெனப் பெரிது மேங்கிய புருகூதன் தன் விழிகள் சிவக்கக்கனன்று போர் விளைத்தான். அவனுக்குத் துணையாகக்கூடிய விண்ணவரையும் மற்றவரையும் வெரின்கண்டு வென்றனருச்சுனனும். தந்தையையும் ஒருபொருட் படுத்தாமல் அவன் தகர்க்கவே, விண்ணுளோரும் மண்ணுளோரும் வெகுண்டு திரண்டார்கள். தகப்பனும் பிள்ளையும் போர்புரியச் சகியாத அசரீரி தக்ககன் முதலே தப்பினனென்றும், குருநிலஞ் சார்ந்துள்ளானென்றும், அச்சுவசேனனும் பிழைத்துவிட்டானதலானினி இந்திரன்கவற்சிக்குக் காரணமில்லையென்றும், கனற்கடவுள் கொண்டலுக் கவியானென்றும் நாநாரணமார் கூட்டத்தைச் சேர்ந்தவரே யென்றும் அவர் பின்னிடாரென்றும் தெரிவித்து அமரனும் அமரர்நாதனும் அமரினை யொழித்தலே யேற்றதென் றறிவித்தது. அம்மொழி செவிப்படலும், சுரபதி துறக்கமடைந்தான்.

மாசுணத் தரசன் மந்திர மமைத்த
வனத்திடை யிருந்தமா மயனை
யாசுசுக் கணிசென் றடர்த்தலும் வெருவி
யருச்சுன வபயமென் றரற்றத்
தேசுடைத் திகிரிச் செங்கண்மால் கருணை
செய்தனன் றீவினை யுறினும்
பேசுதற் கரிய பெரியவர் நினைக்கின்
யார்கொலோ பிழைத்திடா தவரே!

[நாகலோகத்தரசனுக்கு அரண்மனை யமைத்து அவ்வனத்திடையே தங்கியிருந்த மயனை, அக்கினி சென்றடர்த்தலும் பயந்து அருச்சுன அபய மென்றுகூவ, ஒளிபொருந்திய சக்ராயுதத்தையுடைய செங்கண்மாலும் கருணைசெய்தான். தீவினை வந்துற்றாலும், பேசுதற் கருமையான பெரியவர்கள் மனதில் நினைத்தமட்டில் யாரே பிழைத்திடாதவர்]

வன்னி மயனை யடைதலும் அவன் அருச்சுனனைச் சரண்புக, அவ்வமயம் அவனைக் கொல்லக்கருதித் தன் சக்ராயுதத்தைத் தூக்கிய மால்வண்ணனும், அருச்சுன னபயமளித்ததனால் தன்னெண்ணத்தை நிறைவேற்றாமல் மயனைக் காத்தனனென்பது மூன்றுமடியிற் குறிக்கப்பட்டது. தேசுடைத்திகிரி செங்கண்மாலென்னு மடைமொழிகொடுத் தவ்வளவு பொருளைப் பொருத்தியது நாடகநிகழ்ச்சிபோல் நயம்படவுரைத்தலாகும். அக்காலை தக்ககன் மகனும், மயனும், மந்தபாலமுனிவனாலுண்டாக்கப்பட்ட வொருசாதகப் புள்ளின் நான்கு குஞ்சுகளும் தவிர வேறெவரும் பிழைத்திலர். அங்கிக்கடவுளும் அடியார்க் காசிகூறி அசைந்துபோய்த் துறக்கநா டடைந்தான். இச்சருக்கத்தில் முன்கூறப்பட்டபடி சொன்னயம்பொருணயங்கள் அநேகம்காணப்படுகின்றன. இவ்விடத்தில் வில்லி கம்பருக்கும் மீதுறநிற்பது எடுத்துக்காட்டற்பாலது. இலங்கையெரியூட்டு படலத்தில் காணப்படும் கம்பருடைய வருணனைகளைவிடக் காண்டவதகனப் படலத்தில் வருணனைகள் மீசுரமடைந்து நிற்கின்றன. ஆயினும் கம்பரவ்விடத்தில் நகரத்தைப்பற்றியே பேசுகிறாராதலால் அவருக்கு விவரித்துப் புனைந்துரைக்கப் போதுமான விஷயம் கிட்டவில்லை யென்னலாம். எப்படி நோக்கினும் காண்டவதகனச் சருக்கமே மேம்பாடுடைய தென்பதற்கு ஐயமில்லை.

காண்டவதகனச் சருக்கம் முற்றிற்று.

ஆதிபருவம் முற்றிற்று

NATIONAL INSURANCE COMPANY LIMITED
(Head Office: CALCUTTA)

One of the most Progressive Indian Insurance Offices.

Its poularity is due to its low premiums and to the very liberal conditions it offers in all respects.

Before deciding to insure anywhere please compare our rates and compare the benefits.

For Prospectus and Agency etc apply to:—
K. S. GOPALAYYA,
Branch Secretary
Madras Branch, Loane Square
Broadway, MADRAS.

தெய்வச் செயல்

"Providence"

BY

Sir Thomas Browne

இந்தியாவினுடன் நெருங்கிய சம்பந்தம் சிறிதுமிலாத நூற்றாண்டு மூன்றிற்கு முன்னிருந்த ஸர் தாமஸ் பிரௌன் என்னும் அறிஞர், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் தத்துவத்தைத் தான் கண்டு கூறிவைப்பதை உன்னுங்கால், கருத்துலகில் தோய்ந்துவாழ்பவர் எந்நாட்டாராயினும் அவர் எய்தும் முடிவும் ஒன்றேயாகும் என்னும் வாய்மை வலியுறுவதாகின்றது. அவ்வறிஞர் 1605-ம் வருடம் இங்கிலாந்தில் பிறந்து 1682-ம் வருடம் இறந்தவர். அவர் வயித்தியப் பயிற்சிபெற்று ஜீவனத்திற்குரிய தொழிலாக அதைக் கொண்டார். ஆனால், ஜீவனமே வாழ்வென்று கொள்ளாது, கற்பதும், கேட்பதும் சிந்திப்பதுமாய் வாழ்ந்து அவர் வாழ்நாளில் அரிய நூல் பலவற்றை எழுதினார். அவைகளில் ஈண்டு மொழிபெயர்த்துத்தந்துள வியாசம், அவரது சிறந்த கட்டுரைகளில் ஒன்றாகும். தேச சரித்திர சம்பந்தமாகவும், மதசரித்திர சம்பந்தமாகவும் குறித்துள சில பாகத்தை விடுத்து மற்றவகையில் முதல் நூலின்று விலகாது இது நேராக மொழிபெயர்ந்து வந்துளது. திருவுளத்தெண்ணம் போம்வழி தெரிதல் அரிதென்றும், அச்சித்தமே உலகத்தை இயக்கிவைக்கின்றதென்றும் அப்பெரியார் திறமையுடன் விளக்குவது சிந்தித்தற்குரியது.

ஆசிரியர்.

பயிற்சியாலும் முயற்சியாலும் நாம் தெரிந்துகொண்டிருக்கின்ற காரியகாரண நெறியின் நிகழ்வுதான் திருவுளக் கருத்தின் (Providence) சாதாரணமானதும் எளிதில் புலனாகக் கூடியதுமான தோற்றம். காரியகாரண விதிக்கேற்றபடி நிகழுமிதை ஜோதிடசாத்திரத்தின் துணையிலாது தெரிந்துகூறல் அரியதொன்றன்று. விளையும்பயன் இதுவென்று யூகத்தின் துணைகொண்டு இயம்பி விடலாம். ஆனால், இத்திருவுளம் வேறொரு நெறியிலும் நடக்கலாகின்றது. அம்மார்க்கமோ நேரானதன்று. சுற்றியும் வளைந்தும் எளிதில் அறிதற்கியலாவகை செல்லும். அதுதான் திருவுளத்தின் நிறைந்த மார்க்கம். மனித சக்தியெலாம் இயக்கப்பெறுவது அச்சித்தத்தால் தான். இத்திருவுளத்தோற்றத்தைத்தான் நாம் அதிர்ஷ்டம் என்று பெயரிட்டு அழைக்கின்றோம். நிறைந்த தன்மையால் தனது சித்தம் செல்லுமாறு காரியங்களை விளங்காவகை நிகழ்த்திவைக்கும் திருவுளத்தின் மார்க்கத்தை வியந்து நான் மனமாரப் போற்றுகின்றேன். இவ்வாறிருக்க நாமோ மனிதன் வாழ்க்கையில் வந்துறும் சண்டை சச்சரவுகளும், லாபநஷ்டங்களும் எதிர்பாராத எதேச்சா நிகழ்ச்சிகளென்று (accidents) கூசாது கூறிவிடுகின்றோம்.

உட்புகுந்து ஆராய்வோமாயின், வந்துற்றவைகளில் திருவுளத்தின் இயக்கிவைக்கும் கரங்களைக் காணலாவோம். இங்கிலாந்தின் தேசசரிதையில், அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடச் சிலர் செய்த வெடிமருந்துச் சதி வெளியானது ஏதேச்சையின் செயலன்று. i588-ஆம் ஆண்டு ஸ்பெயின்நாட்டு மன்னன் இங்கிலாந்துடன் போர்செய்யத் தன் கப்பற்படைகளைக் கணக்கின்றித் திரட்டி அனுப்பினான். அப்படை இங்கிலாந்தின் கரை சேருமளவில் சுறாவளி ஒன்று தோன்றி அதனைச் சிதறவடித்துவிட்டது. பின் படைவலியில் மிகக்குறைந்த பிரிட்டிஷ் வீரர் வெற்றிகொளவே, ஸ்பெயின் மன்னன் பிலிப் என்பான், 'காற்றுடனும் கடலுடனும் போர் செய்யப்படையை நான் அனுப்பவில்லை,' என்று கூறி மனச்சாந்தி செய்துகொண்டான். இருநாட்டார்பொருங்கால் படைவலி மிகப்பெற்றார் வெற்றிகொள்வர் என்பதுதான் அறிவினுடன் பொருந்தமுறும் முடிவு. ஆனால் எதிர்பாராத நிகழ்ச்சிகள் இடைப்புகுந்து எண்ணியதற்கெதிராகவிளையவைக்குமாயின் அறிவின் துணிவினிற் கொவ்வாத பெரியதொரு சக்தியின் செயலாகும் அது. சுவரின்மேல் ஒருவன் சித்திரம் தீட்டுகையில் கட்புலனாவது கைதான்; தீட்டுமக்கையை நடத்திவைக்கும் வல்லமையை நாம் காணமுடிவதில்லை. அதேபோல் கருமங்களுக்கெலாம் காரணமாயிருந்து இயக்கிவைக்கும் திருவுளம் இருக்குமாறு, நாம் தெரிவதற்கியலாதவொன்று.

ஒரு நாடு அடையும் வெற்றியும், சாதிக்கும் காரியமும் சாமர்த்தியத்தினாலும், தீவிர முயற்சியாலும் விளைந்தவொன்றென நாம் கொள்வது பேதைமை. காலத்திற்கேற்றவாறு ஏற்றமும் வெற்றியும் திருவுளத்தின் சித்தம் நல்குகின்றது. ஒரே காலத்தில் எல்லோரும் சுகமாய் இருக்க வியலாது. ஒரு நாட்டினது ஏற்றம் இன்னொருநாட்டின் வீழ்ச்சியில் நிறுவப்பெற்றுளது. உயர்வும் தாழ்வும் சக்கிரம்போல் சுழன்றுகொண்டிருக்கின்றது. அச்சக்கரச் சுழற்சியின்படிதான் எல்லாம் நிகழப்பெறும். சுழற்றிவைக்கும் வல்லமையை மக்களது சாமர்த்தியம் பெற்றதில்லை; கடவுளின் கையே சுழற்றவல்லது. நாட்டின் ஏற்றமும் இறக்கமும் திருவுளம் விதித்தபடி நிகழ்கின்றன. எனவே சக்கிரத்தின்மேல் நடக்கின்ற மனிதனோ, தேசமோ, உலகமோ, மேலே செல்வதும் கீழே வருவதும், பின் வீழ்ந்து மறைவதும் முறையேதான்.

இத்தகைய நிகழ்ச்சிகளை அதிர்ஷ்டத்தின் விளைவென்று அழைத்திடுதல் பொருந்தாது. மனிதனது அறியாமையே அதிர்ஷ்டமெனும் நாமத்தைக் கற்பித்துளது. நாமும் கருத்தற்றுத் திருவுள சித்தத்தை அதிர்ஷ்டமென்று அழைத்துவிடுகின்றோம். நிகழும் நிகழ்ச்சியின் காரணமெலாம் வரையறையிலாது கோணலாகி முறையற்றதோர் வழிநடக்க உரிமை பெற்றதில்லை. விளைபயனும் நிரந்தரமான மூலகாரணத்திற்கு உட்படாது முடியாது. சூதிலும் விளையாட்டிலுங்கூடக் கடவுளை வேண்டிக்கொள்வதென்பது பரியாசத்திற்குரிய செய்தியென்று கருதவேண்டா? முடிவின்வகை முன்னரே முடிக்கப்பெற்றிருக்கின்றது. ஆகவே, கண்மூடிகள் நாமே யல்லாது, அதிர்ஷ்டதேவதை யன்று. அவளுக்குக் கண்ணுண்டு. நமக்குத்தான் அப்பெருமகளின் இரகசியத்தைத் தெரிவதற்காகாவகை கண் மங்கி யிருக்கின்றது. மங்கலான கண்ணுடைய நாம் பேதைமையால் அவளைக் கண்ணற்ற பொட்டையென்று அழைத்துக் கடவுளின் கண்ணை அவிக்கின்றோம்.

'அதிருஷ்ட தேவதை முட்டாளையே நாடுகின்றாள், சிறந்த அறிவாளிகள் அதிர்ஷ்டத்தின் கைக்கு எட்டுவதில்லை,' என்ற பழமொழிகளையும், 'துஷ்டையென்றும் வேசியென்றும், குருடியென்றும்' அடைமொழி கொடுத்து அவளை அழைப்பதையும் நான் ஏற்பதில்லை. மனவளர்ச்சியென்னும் பெருநிதியைப் பெற்றவர்கள் செல்வம் செல்வாக்காதி சாதனங்களைப் பெறுதிருத்தல் விதியே போலும். செல்வமாதி அதிர்ஷ்டத்தைப் பெறுததால் அறிவுடைப் பெரியோர் மனச்சலிப்புப் பெறமாட்டார். ஏனெனின் இத்தகைய திருவுள சித்தம்போகின்ற போக்கின் நியாயத்தை அவர் தெரிதல்கூடும். அறிவுநிதி பெற்ற அவர் சிறிய தன்மையதான புலனுகர்ச்சியின்பால் நாட்டத்தைச் செலுத்தார். பெற்ற அறிவுநிதியுடன் திருப்தியுறாது, புலனுக்குரிய பொருளுக்கு அவாவிக் கடவுளிடம் வரம்பெற முயல்வது நியாமற்ற பேராசையாகும். சிறு சுகத்திற்கென உழன்று, நிறைவிற்கும் நிரந்தரவின்பத்திற்கும் மூலமான மனநிறையை மதியாது இருப்பது பெரும் பேதைமை. நிறைந்த மனம்பெற்ற பெற்றியில்தான் நாம் நம்மைப் படைத்தவனை ஒத்தவராகின்றோம் அதிர்ஷ்டம் தரும் செல்வாதிபோகங்களை அனுபவிப்பதற்கு முடியாதுபோயினும், அவைகளை அனுபவிக்கும் தகுதி தமக்கு உண்டு என்னும் எண்ணத்தில் அறிவுடைப் பெரியோர் பூரண திருப்தியைப் பெற்றுவிடுகின்றனர். அதிர்ஷ்டம் தமக்கு வரவில்லையே என்று அவர் வருந்தார். முட்டாள்களினிடமே அதிர்ஷ்டதேவதை நோக்கத்தைச் செலுத்தி அவர்களுக்கு எல்லாச் சுகங்களையும் தரட்டும். அது ஒருதலைப் பக்ஷமான செயல் அன்று. நமது பெற்றோரைப் போலிருந்து நம்மைப் பாதுகாக்கும் கடவுள் அவரது மக்கள்பால் பக்ஷபாதமாகக் காரியங்களை நிகழ்த்தமாட்டார், நியாயத்தையே செய்தமைவார். ஒவ்வொருவர் தேகதிடத்திற்கும் மனோதிடத்திற்கும் ஏற்றவாறு அவர் படியளந்து செல்கின்றார். எந்த விதமான வளர்ச்சியும் வலிமையும் பெறுதவர்களுக்குச் சிலவற்றை அதிகமாக அளிக்கின்றார். உற்ற ஒருகுறை வேறு ஒன்றால் சமஞ்செய்யப் படுகின்றது. ஆகவே திருவுளத்தின்பால் கோபங்கொள்ளத் தேவையில்லை. கொம்பும், குளம்பும், உரோமம், தோலும் நமக்குத் தந்த தில்லையே என்று கோபிக்க வேண்டுமோ. அறிவைத் தந்துளார், அவ்வறிவுகொண்டு வேண்டுவதைச் சேகரித்துக் கொள்ளலாம்.

விலங்குகளுக்கு வெயில் மழை பகை இவைகளினின்று தற்காத்துக்கொள்ள கொம்பையும் தோலையும் தந்த கடவுள், வேண்டுவதைத் தேடிக்கொள்ள நமக்கு அறிவைத்தந்தார் அறிவின் செல்வம் பெற்றிராத ஒருவனுக்குப் பொருள்களைக் கொடுத்தளிக்கின்றார். எனவே பக்ஷபாதம் உண்டோ, கடவுள் திருவுளச்செயலில். மேலும், கடவுளின்பால் ஞாபகத்தைக் குறைத்துவிடுமென்று சோதிட சாத்திரத்தையும் நாம் கடிய வேண்டுவதில்லை. அது பொருளற்றதென்று விளக்க நாம் முயலவும் வேண்டுவதில்லை. சோதிடத்தில் பொருள் உளதோ, அன்றோ, அது எதுவாயினும் தெய்வத்தைத் தொலைத்துவிட அதனால் இயலாது. புதனது வீக்ஷண்யம் பெற்றவன் சொற்சாதுர்யம் பெறுவான் என்றும், குருவீக்ஷண்யம் பெற்றவன் செல்வம் பெறுவான் என்றும் இருக்குமானால், புதனுடையஆட்சியிலோ குருவின் காலத்திலோ நான் பிறந்ததற்காக, அக்கிரஹங்களுக்கு நான் வணங்கி வழிபாடு செய்யக் கடமைப்படவில்லை. கிரஹங்களையும் எல்லாவற்றையும் இயக்கிவைக்கும் கருணாகரக்கடவுளிற்கே நான் கடமைப்பட்டுளேன். எல்லாம் அதிர்ஷ்டத்தால் நடக்கின்றன என்பவர், அதிர்ஷ்டத்திலேயே முழுப் பிடிப்பையும் வைத்திருப்பாராயின், அவர்கூற்றுத் தவறுடையதாகாதென்று ஒருவாறு கூறலாம். ஆனால் அதிர்ஷ்டத்திற்குச் சிலைசெய்த ரோமாபுரி மாந்தரும் அதற்கு ஒரு தெய்வத்தன்மை தந்தனர். யோசிப்போமானால் எல்லாவற்றின் துவக்கமும் முடிவும் எல்லாம் வல்ல இறைவனே. இவ்வெண்ணம் நம்மிடம் இருக்குமானால் கிரேக்கநாட்டுப் புலவரான ஹோமர் கூறிய ஏணியினும் சமீபமான வழி துறக்கத்திற்கு இருக்கின்றது. ஒரு வார்த்தை பூமியையும் துலக்கத்தையும் இணைத்துவிடும். ஏ என்பது பி ஆனால், பி என்பது ஸி ஆனால், ஸி என்பது டி ஆனால், ஏ என்பது டி ஆகும் என்று தருக்க சாஸ்திரம் கூறும். இதனினும் எளிய வகையில் நாம்கடவுளுடன்எல்லாவற்றையும் சேர்த்துவிடலாம். தோன்றும் நிகழ்ச்சிகளை மேலெழுந்தவாறு பார்த்துச் சமீபமான காரணங்களைக் கூறுகின்றோம். ஆனால் எல்லா நிகழ்ச்சிக்கும் உண்மையான காரணம் கடவுளே. உலகத்தில் இருப்பதும் இயங்குவதுமாய ஒவ்வொருவஸ்துவின் இருப்பிற்கும் இயக்கத்திற்கும் மூலபுருஷன் அவனே. அவனன்றி ஓரணுவும் அசையாது.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

14. வரைக்காட்சிப் படலம்.

தீயோ ரன்றேல் தீயன செய்யார்.

சிற்றினத்தைச் சேர்வதான்வருந்தீமையைவற்புறுத்துவதனினும் நல்லோருறவால் பெறுவதற்குள உறுதியையே மிகுதியாய் வகுத்துக்காட்டிய வள்ளுவர்தம் அவ்வதிகாரம் எப்பெயர் ஏற்றிருத்தல் தக்கதெனக் கம்பர் கருதினாரென்று நாம் எண்ணுதற்கொண்ணுமோ அப்பெயரையே நாலடியாருள் இவ்விஷயம் ஆராயப்பெற்றுள அதிகாரம் அடைந்துளது. 'சிற்றினஞ் சேராமை' என்பதின்றி இந்நூல் 'நல்லினஞ் சேர்தல்' என்றே உடன்பாட்டு வாய்பாட்டால் உரைக்கக்காணலாம். இந்நாலடியார் அதிகாரத்தின் செய்யுள்கள் பத்தினையும் பற்றிச் சோதனை செய்யுங்காலையிலும், கீழ்களும் மேல்களுஞ் சேர்கின்ற சேர்க்கையின் திறத்தில் கம்பர் நுனித்துணர்ந்த வாய்மையே நன்கு புலப்படுகின்றது. "வெறுமின் வினை தீயார் கேண்மை, எஞ்ஞான்றும் பெறுமின் பெரியார்

616 பக்கத் தொடர்ச்சி

வாய்ச் சொல்'' என அறிவுறுத்திய இது சிறியோரை நோக்கி, "நீர் நும்போன்ருருடன் சேர்வதொழிந்து, பெரியோரை அஞ்சுதலின்றிப் பேணிக்கொள்வேம் என்னும் நோக்குடையராகி அன்னுர் வாய்ச்சொல் பெறுமின்'' எனச் செப்பியதாகும் எனின், சிற்றினஞ்சேராமை, என்றதை இரண்டன் தொகையாகக் கொள்வதன்றிச் "சிறியோர் தம்முள் கேண்மைபூண்டு அளவளாவுதல் செய்யாமை'' என முன்கண்ட பொருளும், 'சிற்றின மஞ்சும் பெருமை' என்றதற்குச் 'சிறியோர் பெரியோரை நண்ணுதற்கு நாணுவர்' ' என்ற பொருளும் எளிதில் இந்நாலடியார் செய்யுளில் எய்தலாகின்றன. இதுவன்றி,

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

[ஊருக்குள்ளே முற்றத்தின்நீரும் ஜலதாரையின் நீரும் கூடிச் சமுத்திரநீருடனே சேர்ந்தால் பேரும் வேருகிப் புண்ணிய தீர்த்தம் என்னப்படும். அப்படிப்போல நல்ல குலத்தில் பிறவாதவரும் நல்ல குலத்திலே பிறந்த பெரியோர்களைச் சேர்ந்தக்கால், மலைபோலப் பெருந் தோற்றமுடையவராவார்]

எனவும்,

ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னுர் கேண்மை கொளின்.

[ஓங்கிய அழகிய பரந்த ஆகாசத்தின்கண்ணே நல்ல கிரணங்களையுடைய வெள்ளிய சந்திரனைச் சேர்ந்துள்ளதனல் முயலும் தொழப்படும். அப்படிப்போலச் சிறப்பில்லாதவர்களாயினும், மலையொத்த பெரியோர்களுடனே நட்புக் கொண்டால் மிக்க சிறப்பினைப் பெறுவர்]

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்ருதாந்—தேரிற்
சிறியோர் சிறுமையுந் தோன்ருதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

[பாலுடனே கூடின தண்ணீர் பாலாய்க் காணப்படுமேயல்லாது தண்ணீராய் நிறம் வேருகத் தெரியத் தோன்ருது. அதுபோல, ஆராய்ந்து பார்க்குமிடத்து நல்லபெரியோர்களின் பெருமையின் சம்பந்தத்தினுலே சிறியவர்களுடைய சிறுமைக்குணமும் தோன்ருது மறையும்]

எனவும், காட்டப்பெற்றிருக்கின்ற உபமானங்கள் நல்லவர் கேண்மையின் மேன்மையையே நாட்டுகின்றன. அங்கணநீர் தீர்த்தமாவதும், மதிமுயல் தொழப்படுவதும், பாலொடு நீர் நிறந்தோன்ருது கலத்தலுமாய இவ்வுதாரணங்களில் சிறுமையால் பெருமை தன்னியல்பு திரியாமை தெரிவதுடன், சிறுமையுமச் சேர்க்கையால் பெருமையுற்று நிற்பதுபோல் தோன்றுமென்பதை நினைக்க நேர்கின்றதேயன்றி, அதுதான் தன்னியல்பே நலமுறத் திரியுமென்பது இயம்பப் பெற்றிலது. "மனந் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனந்தூய்மை தூவாவரும்'' என்று வள்ளுவர் தோற்றமல்லாது இயற்கையுந்திரிந்து நலம்பெறும் எனத்தெருட்டிய கொள்கை நாலடியாரிற் காண்கிலம். ஆயினும், "மனத்தால் மறுவிலரேனும் தாம் சேர்ந்த இனத்தால் இகழப்படுவர்'' என்று கூறிய ஈற்றுச் செய்யுள், "மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி, இனத்தான் ஆம் இன்னுன் எனப்படுஞ் சொல்'' என வகுத்த திருக்குறளோடு சேர்ந்து மனத்தின்கண் தூய்மையுடைய பெரியோர்க்குச் சிற்றினச் சேர்க்கையான் நிகழவல்ல இழுக்கை ஒருபடித்தாய் அளக்கின்றது. எனினும், வளியால் மரக்கலம் கவிழ்வதும், தீயால் சந்தனம் எரிவதும் ஆய இவை 'தீயினஞ் சேரக் கெடும்' என்பதை விளக்குதற்கேற்ற வுதாரணங்களாக அமையும்வகை அறிந்துணர்வது அருமையாயிருக்கின்றது. தீயோர் வலியவந்து அழிப்பதற்கும், தீயினச் சேர்க்கையால் ஒருவன் அத்தீக்குணத்தையுஞ் செயலையும் தானே ஏற்றுக்கொள்வான் என்பதற்கும் என்ன இயைபுஉளது? மாசுணந்தீண்ட மாண்டானொருவனைத் தீயினஞ்சேர்ந்து கெட்டான் எனக் கடிவதுபோலாம் இது.

எனின், தெருண்ட 'மேலவர் சிறியவர்ச் சேரின் அவர்தம் மருண்ட தன்மையையே மாற்றுவர்'' என்ற கம்பரது கொள்கையை நாலடியாருஞ் சார்ந்து நிற்கக் காண்கின்ருேம். மற்றுச் சிற்றினஞ் சேரப்படாதென்பது முற்றிலும் வெற்றுரையேதானே எனின், அதுவுமன்று. செய்கைத் தியராயல்லாதார் அனைவரும் மனமுந் தூயராய பெரியோர் என்றெண்ணற்கிடமில்லை. காமங் கள்ளனைய பாவங்களின் நசை மனத்தின்கண் நிகழவும், காலமும் இடனும் நேராமையாலும் மானமென்பதுபுக்குத் தகைவதற்குச் சிறிதடங்கியும் சிலர் தீமையை மேற்கொள்ளாதவராயிருக்கலாம். அன்னுர் சிற்றினஞ் சேர்வராயின் அவர் தீக்குணம் மேலெழுந்து அதற்கிணங்கிய செயல்களைப் புரிந்திடத் துணிவது இயற்கையே. இதனையுந் தன் நினைவில் வைத்திருந்த கம்பர், இலங்கை யெரியூட்டு படலத்தில்,

பேய மன்றினி னின்று பிறங்கெரி
மாய ருண்ட நறவு மடுத்ததா
றாய ரென்றவர் வைகிடந் துன்னிற்
றீய ரன்றியுந் தீமையுஞ் செய்வரால்

எனத் தனக்கேயுரிய தனிப்பேராற்றலொடு இனிதின் விளக்கலாகின்றனர். இச்செய்யுளை மேல்நோக்காக நோக்குங்கால், அது, "தூயவனுகிய அக்கினிக்கடவுள் கயவர்களாகிய அரக்கர்களது பானசாலையைச் சேர்ந்ததால் அங்குள்ள கள்ளைத் தானும் குடித்தான். ஆதலால், தூயவரும் தீயவர் இடத்தைச் சேர்வாராயின் தாம் இயற்கையில் தீயவர்களல்லாதாராயினும் தீச்செயல்செய்பவராவர், என்பது தெளியலாம்'' என்னப் பொருள்கொடுத்து, இதுவரையில் கம்பர் கருத்தென்று இயம்பியவற்ருேடு முரண்படுவதுபோல்தோன்றலாம். ஆயினும் இப்பொருள் இச்செய்யுளிற் கேற்புடைத்தாகா தென்பது உற்றுநோக்கினுல் தெரியலாகும். தீயர் என்பதி லோர்சிலேடை அமைத்துக்கம்பர், அக்கினி தூயன் எனப்படுவானுயினும் அவன் உண்மையில் தீயனே என விளையாட்டாகக் குறிக்கின்ருர். அதனுற்ருன், "தூயர்என்று அவர் வைகிடம் துன்னினுல்'' எனக் கூறலாயிற்று. இல்லையெனில் தூயர், என்று மாத்திரமே நிற்றல் வேண்டும். முன்னுரைத்த பொருளுக்குத் "தீயர் இன்றியும்'' என இருத்தல் சிறப்பாம்; மற்றிங்குத் "தீயர் அன்றியும்'' என இருக்கின்றது. ஆதலின், "பானசாலையில் பற்றி விளங்குகின்ற தீயானது வஞ்சகர்களான அரக்கர் உண்ட எச்சில் மதுவைக் குடித்தது. இது வியப்பன்று. வாஸ்தவத்தில் தீயராயிருந்தும் தூயர் என்று சொல்லிக்கொண்டு கீழ்மையோர் இருக்குமிடத்தைச்சார்ந்தால், அவர் தீயராய் மனத்தின் இயற்கையில் இருந்தது மாத்திரமன்றித் தீய செயல்களும் செய்பவராவார்'' என்னும் பொருளே இச்செய்யுளமைப்பிற்கும் கம்பர் கருத்திற்கும் ஒக்க முடிந்ததாம். தீமையும் என்பதனினுள்ள உம்மை எச்சப்பொருளது. மனந்தீயராயினும் செய்கையில் அத்தீமை தோற்ருதவரையிலும் தூயரென்று கருதப்பட்டிருந்தோர், சிற்றின மிருந்தவிடம் சேர்ந்தக்கால் மனத்தீமைமாத்திரம் அன்றித் தீச்செயல்களும் அவர் புரியக்காண்பது உலக இயலிற்கிணங்கிய செய்தியே. அதனையே கம்பர் இங்குத் தெருட்டுகின்ருர். முன்னுக்குப்பின் தன்னெடுதானே முரண மொழிந்திலர் திண்ணம்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பால காண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்ருர். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller '' என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

நூதனம்! அதிசயம்

குறைந்த விலைக்கு விற்பனை!!!

எலெக்டிரிக்

மேஜை விளக்கு



இந்த விளக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடியதாய்ப் பல்புடனும் மேல் டோமுடனும் இருக்கிறது. ஸ்விட்ச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும் கூட்டங்கள் மத்தியிலும் இந்த விளக்கை வைத்துக் கொண்டால் ஒருவித கஷ்டமுமில்லா திருப்பதோடு மிக அழகாகவு மிருக்கும். மாணுக்கர்கள் மேஜையின் மீது வைத்துப் படிக்கச் சௌகரியமானது. உடனே எழுதுங்கள். இந்தத் தினுசில் சில விளக்குகளே கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் 4 8 0.

தபால் செலவு வேறு.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,

173, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம் ...	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம் ...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலாநிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

,, சாதாரண கட்டடம் ,, 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam. A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

The Educational Publishing Co.,

Nungambakam, Madras.

வர்த்தமானம்

லஜபதி ஞாபகச் சின்ன நிதி:—காலஞ்சென்ற லஜபதிராய் அவர்களின் ஞாபகச் சின்ன நிதிக்கென இதுவரை 1,87,175 ரூபாய் வசூலாயுள்ளதென மேற்படி நிதியின் நிர்வாகசபையார் அறிவிக்கின்றனர்.

***

பர்மாச் சட்டசபை:—சமீபத்தில் கூடிய பர்மாச் சட்டசபையில், ஸ்திரீகள் ஓட்டுரிமை விஷயமான நிபந்தனைகள் அகற்றப்படவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது என்று தெரிகின்றது.

***

ஸிந்து வெள்ளச் சேதம்:—ஸிந்துமாகாணப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 50 லக்ஷத்திற்கு மேல் மதிப்பிடக்கூடிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்று அரசாங்கத்தார் உத்தியோக முறையில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்.

***

ஸ்ரீராமாநந்த சட்டர்ஜி:—ராஜத்துவேஷ மேற்படக்கூடிய நூலொன்றைப் பிரசுரித்த குற்றத்திற்காகக்கல்கத்தா மாஜிஸ்டிரேட், அவருக்கு 1000 ரூபாய் அபராதம் விதித்துளார். அபராதத்தைக் கட்டாவிட்டால் அவர் மூன்றுமாதச் சாதாரணச் சிறைவாசம் அனுபவிக்கவேண்டும்.

***

சென்னைச் சைவசபையார்:—சென்னைச்சைவசபையார் சில கனவான்களின் பொருளுதவிகொண்டு சுந்திரமூர்த்தி நாயனர் பாடியருளிய தேவாரத்தை 2 அணு விலைக்கு வெளியிட்டுள்ளார்கள். முதற்பதிப்பாக 10 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. இப்படியே மற்ற இருவர் தேவாரமு[illegible] அச்சிடப்படுமென்று தெரிய வருகிறது.

***

மதுவிலக்குப் பிரசாரம்:—சென்னைக் கோகலேமண்டபத்தில் 12-ந்தேதி திங்கட்கிழமை மாலை மதுவிலக்கு விஷயமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஸ்ரீமதி மாலாவதி பட்டவர்தன், மிஸஸ் லக்ஷ்மிபதி, ஸ்ரீமான்களான சத்தியமூர்த்தி ஐயர், முத்துரங்க முதலியார், ஆரோக்கியசாமி முதலியார், காளேச்வாராவ், ஹரிசர்வோத்தமராவ் முதலியவர் மதுவினுல் ஏற்படும் தீமையை எடுத்து விளக்கினர்.

***

அண்ணுமலைசர்வகலாசாலை:—'அண்ணுமலை சர்வகலாசாலை ஸினேட் சபைக்குத் திருவையாறுசமஸ்கிருதக் கல்லூரியிலிருந்தும், ராமேச்வரம் சமஸ்கிருதக் கல்லூரியிலிருந்தும் அங்கத்தினராக ஒருவரை அக்கல்லூரியார் தெரிந்தெடுத்து அனுப்பலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரும் ஒரு அங்கத்தினரை அனுப்பி வைக்கலாம்.' என்று மேற்படி சர்வகலாசாலை ரிஜிஸ்டிரார் அறிவிக்கின்றார்.

***

ஸ்ரீ மீனுட்சி சங்கம்:—கொ. லெட்சுமிபுரத்தில் இச்சங்கத்தின் நான்காவதாண்டு ஐந்தாவது மாதக் கூட்டம் 5-8-29 தேதியன்று கொத்தமங்கலம் திருவாளர் ராம. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பல அன்பர்கள் சொற்பெருக்கிட்டார்கள். சபை இரவு 7-மணிக்கு இனிது நிறைவெய்தியது, எனக் காரியதரிசி ந. சொ. அருணுசலன் செட்டியார் தெரிவிக்கிறார்.

***

பம்பாய் நிலவரிச் சங்கம்:—பம்பாய் நிலவரிச் சங்கத்தார் விரும்பும் நிலவரித்திருத்தம்:—நிலங்கள் குடிகளினுடைய சொந்தஉடைமையாக விருக்கவேண்டும். கவர்ன்மெண்டாருக்கு நிலம் சொந்தமன்று. நிலவரி வருமானத்தின்மேல் போடவேண்டும். நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் செலவுபோகப் பாக்கியாயிருக்கும் தொகையில் அரசாங்கத்தார் ஒரு பகுதியையே பெறலாம். நிலவரி விதிக்கும் விஷயத்தில் அரசாங்கத்தார் சட்டசபையுடன் கலந்து முடிவு செய்யவேண்டும்.

***

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி:—சென்ற வாரம் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தலைமையில் காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. இக்கூட்டத்தில் 'காங்கிரஸின் லக்ஷியம் பூரண விடுதலையே' என்று இவ்வருட லாகூர் காங்கிரஸார் தீர்மானிக்கவேண்டுமென்று இக் கமிட்டியார் முடிவு செய்கின்றனர் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். ஸ்ரீமான்களான பாஷ்யம், ஆதிநாராயண செட்டியார், வெங்கடரமண ஐயங்கார் முதலியோர் இதை ஏற்கவில்லை; ஆயினும் தீர்மானம் நிறைவேறியது.

***

கல்கத்தாவில் தடை உத்திரவு:—கல்கத்தா போலீஸ் கமிஷனர் வங்காள காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசிக்குக் கீழ்கண்ட உத்திரவை அனுப்புவித்துள்ளார்:—இப்பொழுது சணல் ஆலைத்தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறபடியினுலும் பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் கலக மேற்படச் செய்யக் கூடியதாகையினுலும், பொது நன்மையையும், அமைதியையும் உத்தேசித்துக் கல்கத்தா நகர எல்லைக்குள் ஒருவாரகாலம்வரை, போலீசார் அனுமதியில்லாமல் பொதுக்கூட்டங்கள் நடத்தவோ, ஊர்வலங்கள் செய்யவோ கூடாது.

***

காங்கிரஸ் தலைவர் பதவி:—இவ்வருடம் லாகூரில் கூடவிருக்கும் காங்கிரஸிற்குத் தலைவர் நியமனவிஷயமாய்க் காந்தி அடிகள் அவரது பத்திரிகையில் எழுதுவதாவது.—காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாய் யோசனை செய்துவருபவர்களுக்கு நான் கூறும் யோசனை, ஜவஹரிலால் நேருவுக்கு அப்பதவியை அளிக்கவேண்டுமென்பதே. வயதானவர்கள்தான் காங்கிரஸில் தலைமை வகிக்கவேண்டுமெனக் கொண்டகாலம் மலையேறிவிட்டது. வாலிபர்களும், வாலிபஸ்திரீகளும் வருங்காலப் போராட்டத்தை நடத்தவேண்டியவர்கள். ஆகவே வாலிபர் ஒருவர்தான் தலைமை வகித்தல்பொருந்தும். வயதானவர் இனி இப்பதவியை வாலிபர்களுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். காங்கிரஸ் தலைமைபூண்டு நாட்டை நடத்தும் யோக்கியதை ஜவஹரிலாலிடம் இருக்கின்றது. அவர்தான் வாலிபர்கள் மனதையும், விவசாயிகள், ஏழைகள், தொழிலாளர்கள்மனதையும் கவர்ந்துள்ளார். ஐரோப்பிய அரசியலையும் நன்குதெரிந்தவர். ஆகவே அவரது தலைமை நமக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam MADRAS.

(89067)

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீட்ஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—			
	பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
	ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
	காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)